அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

18-8-61 (வெள்ளி) விலை 16 காசு

"ஓ! என் நாட்டு மக்களே! உங்களைத்தான் அழைக்கிறேன்! அடிமைப் புழுதியில் அமர்ந்து அழுதுண்ணும் அன்னைத் திரு நாட்டு மாந்தர்களே!

தங்கக் கூண்டில் சிறகடித்துச் சிரித்துக் கொண்டிருக்கிறேன் என்று அழகிய புள் கூறுவதுண்டோ? தகிக்கின்ற சுடுமணலில் மிதிக்கின்ற இடமெல்லாம் தணலின்றி பனிப்பாளம் தென்படுமோ? ஆகையால் தேசத்தோரே! நான் ஒன்று சொல்லுகின்றேன்—இந்தப் பூமி நமக்குத் தான் சொந்தம்—என்ற போர்க் குரலை எழுப்பிடுவீர்; புயல் வீசட்டும் சில நாள்! இன்றென்ன வாழ்கிறது—வீசுகின்ற தென்றலிலும் நெருப்பு — நெருப்பு — பிணக்காட்டுப் பெரு நெருப்பு! நெடுநாசி துளைக்கின்ற சுடு நெருப்பு!

ஆகையால் தேசத்து பெரு மக்காள்! ஓடி வருவீர்! ஓடி வருவீர்!"

என்று உருவத்தால், சிறுத்து உள்ளத்தால் உயர்ந்த தலைவன் முழங்கினான் --- முரசறைந்தான்.

ஒலி கேட்டு ஊர் கூடிற்று!

உழவர்கள் கூடினர்,

உழைக்கும் தோழர்கள் எழுந்னர்.

மண்டிக் கடையினர் --- எசமானரை

அண்டிப் பிழைப்போர் அனைவரும் சேர்ந்தனர்.

வண்டிக்கு அச்சாணி

நொண்டிக்கு ஊன்றுகோல் போல—

நன்றிக்குரிய தலைவன் கிடைத்தான் என்று நாடு,பாடிற்று!

நாவலர் சூழ்ந்தனர்!

பாவலர் படையும் பெருகிற்று!

ஒழுங்கான சிந்தனை---

மழுங்காத பேரறிவு -

கலங்காத நெஞ்சமுடன் காத்திருந்த வீரரெல்லாம் கடலெனக் குமுறினர்.

நேற்றிருந்த சோம்பல் நீங்கிற்றென்று - தலையில்

பூத்திருந்த முல்லையுடன் ஆர்த்தெழுந்தார் - பெண்டிரெலாம்!

வாத்து முக மனிதர் சிலர்' வாழ்ந்திருந்த தாயகத்தை அடிமை கொண்டு -

சாத்துபடி கலைந்துவிட்ட சிலை போல் ஆக்கிவிட்டார் -

ஏற்றமிகு தென்புலத்தார் எழுவீர் என்றான்.

விட்டில்பூச்சி

தலைவன் குரல் கேட்டு எழாதார் இல்லை! ஆனால்

பிணம்போல் படுத்திருந்த மனிதரையும் மறப்பதற்கில்லை!

—

"அடிமை நிலை, மிடிமைநிலை ஆகாத நிலையென்று யார் சொன்னார்?" எந்த நிலையிருந்தாலும் எங்கள் ஏகாந்த நிலைக்கு இடையூறில்லை! போகம் குறையவில்லை! போதை தெளியவில்லை! மதுக் கிண்ணம் தருகின்ற மாதர் வாய்க் கிண்ணம் பருகுதற்குத் தடையுமில்லை."

எனக் கூறித் தலைவனையே இகழ்ந்து விட்டுத் தலை நிமிராக் கொள்கைதனைக் கடைப்பிடித்தார் சில பேர்கள்!

அவ்வுலகில் வணிகர்—செல்வர்—கலைக்குழு மாந்தர் இன்னோரன்ன பிறர் இருந்தனர்.

தலைவனின் குரல், அவர்களைச் சுற்றிச் சுற்றி ஒலித்தது!

அடிமைகளே! எழுங்கள் உங்களுக்கும் சேர்த்துத்தான் விடுதலைப்போர் துவங்கப்படுகிறது -

அவர்கள் வெகு தூரத்தில் உறங்கினர்,

தலைவன் விடவில்லை, மீண்டும் கூவியழைத்தான்.

"இங்கு, தன்னையுணர்ந்த மனிதரே இல்லையா?" தலைவனின் ஏக்கக் குரல், இன்பலோக வாசிகளின் 'கொரட்டை' சப்தத்திற்குப் பின்னணி இசையாயிற்று.

தலைவன், தளரவில்லை, மூச்சைப் பிடித்துக் கொண்டு கத்தினான். விலா, வலியெடுக்க—வலியெடுக்கக் கதறினான். கலையுலகத் திரை கிழித்து நாட்டுக் காவலன்போர் முழக்கம் முட்டிற்று. அப்போதும் போதை கொண்டோர் செவிக் கதவு திறக்கவில்லை.

போர்த் தினவைத் தோளில் ஏற்ற நாலைந்து கலை இளைஞர்—போக போக்கியக் களஞ்சியமாய்க் கலையுலகம்இருக்கின்ற நிலை மாற்ற நெஞ்சில் நினைவு பூண்டோர் தலைவன்நின்ற, திக்கு நோக்கி ஓடிவந்தனர்.

"நிலத்தை மீட்கின்ற பெரும் பணியில் - ருசியாவில் - சீனத்தில் கலைத் துறை மக்களது ஒத்துழைப்புப்பார்த்தீரோ? அவ்வண்ணம் துணை நிற்பீர், அன்னைத் திருநாட்டை மீட்பதற்கு!" என அறிவித்தான் தலைவன்.

"அரசியலில் கூத்தருக்கு இடமுண்டோ?" அந்தக்கலைத்துறை மேதைகள் தலைவனைக் கேட்டனர்.

"முத்தமிழில் இயல், இசையுடன் கூத்தையும் சேர்த்தவன் முட்டாள் அல்ல!"

தலைவனின் பதிலை நாடு புரிந்து கொண்டது.

கூத்தர், எழுத்தாளர், கோலமிகு பாட்டெழுதும் பாவாணர், இசைவாணர், இயக்குநர், என்ற கலையுலகப் பெரும் பகுதி, ஓங்கிய குரலில், "ஒழிக! அடிமைத் தனம்!" என ஒலித்தது!

நெசவாளர், விடுதலைச் சின்னம் பொறித்து ஆடை நெய்தனர்.

படம் விற்போர், தாயகத்து விடுதலைக்கு உழைக்கின்ற தளபதிகள் திருவுருவைப் பரவவிட்டனர்.

பாட்டெழுதும் கவிகள் எல்லாம் கொள்கை வரி எழுதுவதில் பெருமையுற்றனர்.

வண்டிக்காரன் நொண்டிச் சிந்தில் 'வாழ்க தாயகம்' ஒலித்தது!

அங்காடிகளில் விடுதலைப் பேச்சு!

அரங்காடும் கூத்தர்கள் அன்னை நாட்டு விடுதலையை கதையின் மையமாக்கி ஆவேச மூட்டினர்!

அத்தனை பேருமே போருக்கு அழைக்கின்ற நேரத்தில் - எத்தனை இடர் வரினும்ஏற்படற்குச்சித்த

12-ம் பக்கம்

தலைவெட்டி இயக்கம் என்றனர்...
தடை செய்தனர்...
தலைவனை 10 ஆண்டுகள் சிறையில்...
போட்டனர்...

...ஆனால்! அவன் திறந்துவிடப்பட்டான்!!

• பத்தாண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்கக்கண்டத்தின் கிழக்குப்பகுதியில் உள்ள கென்யா நாட்டில் இருந்துவந்த செய்திகள் உலகம் முழுவதையுமே மிரண்டிடச் செய்தன. விடுதலைப் போரில் அப்படிப்பட்ட பயங்கரமான முறையை அந்த நாடு பின் பற்றிக் காட்டியது. அந்த நாட்டின் விடுதலையை விரைவில் பெற்றே ஆகவேண்டும் என்ற குழுவினர் சிலர், தங்கள் மனத்தில் பட்டபடி எல்லாம் செயலாற்றத் தொடங்கினர். அமைதியான அரசியல் கிளர்ச்சிகளை அவர்கள் பின்பற்றவில்லை. தங்களுக்கு அரசியல் உரிமையை மறுப்பது வெள்ளையர் இனம் என்று அவர்கள் கருதினர். ஆங்கிலேயரை எங்கு கண்டாலும் வெட்டி வீழ்த்துவது என்பதுதான் அந்த இயக்கத்தினரின் வேலையாயிற்று. இந்தப் பயங்கர இயக்கத்தின் பெயர் "மாவ் மாவ்" என்பதாகும். "தலைவெட்டி" இயக்கம் எனலாம் சுருக்கமாக. இந்த இயக்கத்தின் வேகம் கண்டு உலகமே நடுங்கிற்று. பல நாடுகள் இந்தப் போக்கைக் கண்டித்தன. இந்த இயக்கத்தை அடக்குவதற்கு பெரிய கடுமையான நட

இராசாராம் பி. ஏ.

வடிக்கையை ஆங்கிலப் பேரரசு எடுத்துக் கொண்டது. சுமார் எண்பதினாயிரம் பேரை அரசாங்கம் சிறைபிடித்து பலரைக் கடுமையாகத் தண்டித்தது. 1953-ம் ஆண்டு இந்த இயக்கத்தின் தலைவர் என்று கருதப்பட்டவரும், இங்கிலாந்தில் பயின்றவரும், ஆசிரியராகப் பணியாற்றியவருமான ஜோமா கென்யாட்டா, என்பவரைக் கைது செய்து சிறையில் தள்ளியது.

70 வயது நிரம்பிய கென்யாட்டா, கென்யா மக்களின் சுதந்திரச் சின்னமாகக் கருதப்படுகிறார்! கென்யாவுக்கு மட்டுமல்ல, இருண்ட கண்டமென்று அழைக்கப்படும் ஆபிரிகாவின் விடுதலைத் தேவன் என்றும் மக்களால் போற்றப்படுகிறார்!!

நீக்ரோ மக்களிடையே பற்பல பிரிவுகள் உண்டு—ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைவர்களுமுண்டு—ஆனால் சகல பிரிவினரும் 'தலைவர்' எனக் கருதும் உன்னதமான இடத்தைப் பெற்ற ஒரே ஒருவர் உண்டென்றால், கென்யாட்டாதான்.

புலியைப் போல ஊடுருவும் கண்கள், அடர்ந்த தாடி, அழகான கைத்தடி, கம்பீரமான உருவம் கொண்ட கென்யாட்டா, கிட்



ஜோமோ கென்யாட்டா-ஆபிரிகாவின் விடுதலைச் சின்னம்! தூற்றல்களால் ஒழியாத மக்கள் தொண்டன்!!

டத்தட்ட பத்தாண்டுகளாகப் பூட்டிவைக்கப் பட்டிருந்தார்! பூட்டிய கதவு திறந்து, இந்தக் கிழமை அவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்!!

* * *

கென்யா நாட்டின் பெரும்பகுதி மக்கள்: "கிகூயு" என்ற இனத்தைச் சார்ந்தவர்களாவர் இச்சமுதாயத்தில்தான் ஜோமோ கென்யாட்டா தோன்றினார். ஜோமோ கென்யாட்டாவின் வரலாறு மிக்கச் சுவையானதொன்றாக உள்ளது.

சிறுவனாயிருந்த பொழுது குடும்பத்தின் ஆடுமாடுகளை மேய்ப்பதே அவருடைய கடமையாயிருந்தது! அவருடைய தாத்தா, ஒரு வைத்தியர். மருந்து கொடுக்காமல் மந்திரம் மூலம் நோய்களைக் குணப்படுத்துகிறவர் என்று போற்றப்பட்டவர், இப்படிப்பட்ட மூட நம்பிக்கை ஆபிரிகா கண்டத்தில்வாழும் நீக்ரோக்களிடையே உண்டு. 'முண்டோ முகூ' என்றழைக்கப்படும் இந்த மந்திரவாத மருத்துவர்களே, அவர்களது ஆத்மீகக் குருக்களுமாவர்!!

கென்யாட்டாவும் தாத்தாவின் தந்திர வித்தைகளை ஆரம்பத்தில் பயின்றவர்தான். 10 வயதாயிருக்கும் பொழுது ஆடுமாடுகளை விட்டு, அருகே இருந்த மாதா கோயிலுக்கு ஓடி, அங்கே படிக்க முயன்றார். கிராமத்திலிருந்தபடி, அப்போது வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த நைரோபி நகரத்தின் பளபளப்பைப் பற்றிக் கேள்விபட்டு அங்கே ஓடினார்! அங்கே போய் ஒரு ஐரோப்பியர் வீட்டில் வேலைக்காரனாயிருந்தார். கூக் எனும் அந்த ஐரோப்பியர் சிறுவனின் கூர்த்த மதியையும் ஊக்கததையும் கண்டு, மாதா கோவிலில் படித்ததையும் சொல்லி, ஒரு குமாஸ்தாவாக ஆக்கினார்!

1921-ல் தான் கென்யாவில் வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்க்கும் கிகூயு சங்கம் துவங்கிற்று. 1922-ல் அந்தச் சங்கத்தில் கென்யாட்டா உறுப்பினர் ஆனார். 1925-ல் சங்க நிர்வாகிகளுள் ஒருவரானார். கிகியு சார்பில் நடந்த இரண்டே இரண்டு பக்கங்கள் கொண்ட ஒரு தாளுக்கு ஆசிரியருமானார்! 1920 க்கு முன்பு வரையில், கென்யாவில், வெள்ளையர் — கருப்பர் தகராறே கிடையாது. கருப்பரின் நிலங்களைத் தங்களுடையது என்று வெள்ளையர் பிடுங்க ஆரம்பித்ததின் விளைவாகவே தேசீய உணர்வு அரும்பிற்று. அது முதல் வளர்ந்து பர்ணமித்து வந்த விடுதலை வேகத்தைக்கண்ட கென்யாட்டா, மேற்கத்திய நாடுகளைப் போல ஒரு அரசியல் இயக்கம் உருவாக வேண்டுமென விரும்பினார். அதனால் 1929—ல் தங்களையாளும் இங்கிலாந்து நாட்டுக்குப் போனார். அங்கே போய், வெளி நாட்டு மந்திரியைப பார்த்து பேச விரும்பினார். அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் அதே ஆண்டில் அவருக்கு ருஷ்யாவுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது! அங்கு போகவர, இங்கிலாந்திலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சி உதவி செய்தது என்றாலும் அவர் ஒரு கம்யூனிஸ்டாகவில்லை!!

1930-ல் கென்யா போய் மீண்டும் 1931-ல் இங்கிலாந்து வந்தார்.

அதுமுதல் பதினாறு ஆண்டுகள் அவர் இங்கிலாந்திலேயே தங்கியிருந்தார். ஆபிரிகா மக்களின் 'குரல்' போல இங்கிலாந்தில் உலவிய இவருக்கு, பிளாட்பாரங்களே, தங்கும் விடுதிகள்! நாடோடியைப் போல் அலைந்தார்!!

தன்னுடைய இளையவயது முதலே விடுதலைத்தாகம் கொண்டவராகக் காட்சி அளிக்கிறார். இங்கிலாந்தில் இருந்தபோதும் அந்த உணர்ச்சி குறைந்ததாக தெரியவில்லை, அந்த நாட்டில் படிக்க வந்த தன்னாட்டு மாணவர்களையெல்லாம் அணிதிரட்டி, ஐந்தாவது அகில ஆப்பிரிக்கர்களின் மாநாட்டை 1945ம் ஆண்டு அக்டோபர் மாதம் மான்செஸ்டர் நகரில் கூட்டினார். இருநூறு பிரதிகளுக்குமேல் கலந்துகொண்ட அந்த வெற்றிகரமான மாநாட்டிற்கு இன்றைய தினம் கனா நாட்டின் தலைவராக உள்ள நுக்ருமாவும், ஜோமோ கென்யாட்டாவும் தான் செயலாளர்களாக இருந்திருக்கின்றனா. இந்த மாநாடு முடிந்ததும், ஜோமோ கென்யாட்டாவும் மாக்கினான் என்ற ஆப்பிரிக்கரும் மான்செஸ்டர் நகரிலேயே தங்கி அகில ஆப்பிரிக்கர் கழகம் ஒன்றை உருவாக்கினார்கள். ஆப்பிரிக்கா மக்கள் மனதில் பெரும் எழுச்சியை உண்டாக்க வேண்டும் என்ற கருத்தில் "அகில ஆப்பிரிக்கா" என்ற ஒரு மாத இதழை உண்டாக்கி தனதுகருத்துக்களை அந்த இதழ் மூலம் வெளியிட்டார், கனா நாட்டின் பிரதமரும் கென்யாட்டாவும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒரே நேரத்தில் அரசியலில் இறங்கியவர்கள். இருவரும் தங்கள் கல்லூரி வாழ்க்கையிலேயே, தாய் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள், ஆனால் கனா நாட்டு நுக்ருமா கையாண்ட அரசியலும் கென்யா நாட்டு ஜோமோ கையாண்ட அரசியலும் வெவ்வேறு பாதைகளை வகுத்துக் கொண்டன.

1946 ல் இங்கிலாந்திலிருந்து கென்யாவுக்குத் திரும்பினார் கென்யாட்டா!

தாய் நாட்டு மண்ணில் அடியெடுத்து வைத்ததும், மண்டியிட்டு மண்ணைக் குனிந்து முத்தமிட்டார்!! இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவி அவருடைய பெயரை எங்கும் பரப்பியது. இதனால், அவர் செல்வாக்கு வளர்ந்தது. ஆனால் வெள்ளைக்காரக் கவர்னரான மிச்செல் என்பான்

(11-ம் பக்கம் பார்க்க

நான் கண்ட அண்ணா

அரங்கண்ணல்

- 3 -

ஜனநாயகம்!— ஒரு அற்புதமான சொல். இந்த நூற்ருண்டு ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு உன்னதமான சிந்தாந்தம். மாற்ருரை மதிக்க வேண்டும், என்கிற அடிப்படையில் எழுந்த கொள்கை இது.

மக்களுடைய விருப்பு வெறுப்புகளை உணர்ந்து ஆட்சிகள்நடக்க வேண்டும் என்பது ஜனநாயகத்தின் தத்துவமாகும். மக்களுடைய அன்பைப்பெற அரசியல் கட்சிகள் பாடுபடும் — தன்னுடைய வழியே நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று எடுத்துவைக்கும். அவைகளை மக்கள் ஏற்றுக் கொண்டால், அந்தக் கட்சியை ஆளும் பொறுப்பில் 'தேர்தல்' மூலம் தேர்ந்தெடுப்பர்! இதைக் கண்டு தோல்வியுற்ற கட்சி, மக்களை ஆத்திரத்தால் ஏசுவதோ' வெற்றி பெற்ற கட்சியை பலாத்கார மூலம் ஒழிக்க முயல்வதோ, நற்பண்பு அல்ல. அடுத்த தேர்தல்வரும்வரை காத்திருந்து அதற்குள் மக்களுடைய மனதில் இந்தக்கட்சியின் கொள்கைகளே ஏற்றதென்கிற எண்ணம் ஏற்படுகிறவகையில் முயற்சிக்க வேண்டும். விழிப்போடு இருந்து ஆளும் கட்சி செய்கிற தவறுகளை எடுத்துரைத்து நல்வழிப் படுத்த வேண்டும்!

'எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சிக்கு கடிவாளம் போல!'' என்பது அண்ணுவுடைய கருத்தாகும்.

இந்தக் கருத்தைச் செவ்வனே இயக்கிடும் பிரிட்டிஷ் பாராளுமன்ற முறைகளைப்பற்றி அண்ணு அடிக்கடி வியந்துரைப்பார். அட்லீ ஆள்பவராக வந்துவிட்டால் உலகம் போற்றும் சர்ச்சில்கூட அவருக்குரிய மரியாதைகளை மறுக்கமாட்டார். அதேபோல, தான் ஆளும்பிரதமராக வந்துவிட்டோம் என்பதால், சாச்சிலுக்குரிய கௌரவத்தை அட்லீ புறக்கணிக்கமாட்டார். நாட்டின் பிரதமருக்கு அடுத்த இடம், அங்குள்ள எதிர்க்கட்சித் தலைவருக்குண்டு. திடீரென ஒரு நெருக்கடி தேசத்துக்கு உண்டானுல், நாட்டின் பிரதமரும் அவரது மந்திரிசபையும் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய மேலான ஆலோசனைகளைக் கேட்கும்கட்சி அரசியல் இருப்பது, நாட்டின் வளர்ச்சிக்கு என்கிற கருத்து ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும்! கட்சி அரசியல்இருப்பது, தனிப்பட்ட ஆளின் வளர்ச்சிக்கு என்கிற கருத்து இன்று ஜனநாயகப் போர்வையில், காங்கிரசால் உருவாக்கப்பட்டு வருகிறது!! அதனுல்தான் எதிர்க்கட்சித்தலைவர்கள் என்ருல் மதிக்காமல் அவர்களுடைய கொள்கைகளைக் குற்றம்கூறுவதற்குப்பதில் தனிப்பட்ட முறையில் 'அடா! போடா! வாடா! என்கிற பாணியில் தாக்கும் கடைநிலை அரசியல் பேச்சாளர்களைக் காங்கிரஸ் வளர்த்து வருகிறது.

''அப்படித் தாக்குகிருர்களே என்பதால் நாமும் தாக்கக்கூடாது. அது ஜனநாயகப் பண்பல்ல. என்னுடையஉயரமும், எடையும், அல்ல நாட்டுக்கு முககியம்; நான் சொல்கிற கொள்கை. அந்தக் கொள்கையிலுள்ள குற்றம் குறைகளைக் கூறுவதற்குப்பதில், தனிப்பட்ட மூறையில் என்னை இழிவாகப் பேசினுல் அவர்கள் பேசிவிட்டுப் போகட்டும். ஆனுல் அதேவழி நமக்கு வேண்டாம்! தனிப்பட்ட வகையில், ஜனநாயகம் தந்த உரிமைகளை அவர்கள் அனுபவிக்கும் வாய்ப்பினை முழு மனதோடு தருவோம். ஜனநாயக முறைப்படி ஆட்சிக்கு வந்தவர்களை அவர்களுக்குரிய மரியாதைகளைக் கொடுத்து நாம்மதிக்க வேண்டும்,'' என்பது அண்ணு அவர்களுடைய கோட்பாடாகும்,

அதனுலேயே முதலமைச்சர் காமராசர் அவர்களைத் தன்னுடைய தொகுதிக்கு அழைத்து வந்து அண்ணு அவர்கள் கவுரவப்படுத்தினுர்கள். அன்று மாலை சிறப்பாகவும் நல்ல முறையிலும் விழா நடைபெற வேண்டுமென்பதில் சொந்த முறையில் அண்ணு அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கரை பெரிது! அண்ணுவை வரவழைக்கவும், அவர்வரும் கூட்டங்களை விழாப்போல நடத்தவும், துடிக்கும் இலட்சக்கணக்கான கழகத் தோழர்கள் உண்டு!

அப்படிப்பட்ட அண்ணு, காமராசருக்கு வரவேற்புகொடுப்பதில் அத்தகைய உற்சாகத்தைக்காட்டினுர்!!

காரணம், ஜனநாயகம் இந்நாட்டிலியங்க முன்மாதிரியாக நடந்து காட்டவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு. அதற்கேற்ற பண்புகளையும் பழக்கங்களையும் நாமே வளர்க்கவேண்டும். அதன் மூலம் மாற்ருருக்கும் ஏற்படச் செய்யவேண்டும் என்பது அவருடைய எண்ணமாகும். நாட்டில் மட்டுமின்றி நம்முடைய கழகத்துக்குள்ளும் 'ஜனநாயகம்' நல்ல முறையில் மலர வேண்டும் என்பது அண்ணுவின் விருப்பம் என்பதை நாமும் அறிவோம், நாடும் அறியும்! நமக்கெல்லாம் ஜனநாயக உணர்வை உண்டாக்கித்தர அவர் மேற்கொண்ட வழிகளையும் முறைகளையும் எண்ணும்போது உண்மையிலேயே எவரும் வியக்கவே செய்வர்!!

* * *

திருத்துறைப் பூண்டியில் அண்ணு அவர்களை அழைத்துக் கூட்டம் நடத்தியதற்குப் பிறகு நான் அண்ணு அவர்களை நேரில் போய் சந்தித்ததே இல்லை. ''திராவிடநாடு'' ஏட்டின் மூலம் அண்ணுவைநான் சந்தித்தது உண்டே தவிர, அடிக்கப் போய்ப் பார்க்கும் சந்தர்ப்பமும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டது கிடையாது.

நீடாமங்கலத்தில் நடந்த திராவிட மாணவர் கழக மாநாட்டிலும் திருச்சியில் நடைபெற்ற திராவிடர்க்கழக மாகாணமாநாட்டிலும் அண்ணு அவர்களைத் தூர இருந்தே ரசித்தவன்.

நன்ருக நினைவு இருக்கிறது. மறுநாள் காலை திருச்சி மாநாடு. அண்ணுமுதலியதலைவர்கள் திரு. டி.பி.வேதாசலம்அவர்களதுபங்களாவில் தங்கியிருந்தார்கள். தலைவர்களைப் பார்த்து வரலாம்என்று போனேன். அண்ணு, நடிகமணி டி. வி. என்., சம்பத் முதலியவர்கள் ஒரு அறையில் உட்கார்ந்து ஏதோ ஒருநாடக ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒலி பெருக்கி மூலம் அந்த ஓரங்கநாடகத்தை, மாநாட்டில் நடத்தஇருந்தார்கள். என்னைக் கண்டதும் தோழர் சம்பத் எழுந்து வந்தார். அந்தச் சமயம் தோழர் எஸ். கருணனந்தம் அவர்கள் அய்யாவின் 'குடியர'சில் இருந்தார். அவர் தாயும் தந்தையும் தம்பிகளும் திருத்துறைப்பூண்டியிலிருந்தனர் வீட்டுக்கு மூத்தப்பிள்ளை—இண்டர் மீடியட் படித்தபிள்ளை—கலியாணமாக வேண்டிய பிள்ளை—வீட்டையும் எல்லாவற்றையும் துறந்து, ஈரோடே சதம் என்று கிடக்கிறதே என்று அவருடைய தாய் அடிக்கடி என்னிடம் வருத்தப்படுவார்கள்!

அண்ணன் கருணனந்தம் கழகத்தின்மீது கொண்டிருக்கிற ஆர்வம் பற்றி எனக்கு ஆனந்தமே. ஆனுல் பெற்ருேரின்பெருமூச்சுக்களைப் பற்றிக் கவலைப்படமாட்டேனென்கிருரே என்றும் கவலை உண்டு. அதனுல், நான் இவைகளை. விளக்கி கடிதம் எழுதுவேன். பெரும்பாலும் என்னுடைய கடிதங்கள் அப்போது கவிதைகளாகவே யிருக்கும். கூழாங்கற்களைக் காசு என்றெண்ணிச் சேர்த்துப் பையில் போட்டுக் கொள்வதுண்டல்லவா, சிறுபிள்ளைகள்! அதைப்போல, ஆங்காங்கே படிக்கும் அறிவுரைகள்—நல்ல வரிகள்—முதலியவைகளைக் கோர்த்தெடுத்து எழுதுவேன். அந்தக் கடிதங்களைக் கருணனந்தம் சம்பத்திடம் காட்டுவார் போலிருக்கிறது. என்னிடம் வந்த சம்பத் வெகுவாகப் பாராட்டினுர்—கடிதத்தின் வரிகளைமனப்பாடம் செய்தவர்போல் குறிப்பிட்டு, பெருமைப்படுத்தினுர். அந்த சம்பத்...?

சரி, காலம் ஏற்படுத்தும் சுயநலம் உலகில் எதையெதையோ அறுத்தெறிந்து கொண்டுதானே போகிறது!!

அம்மாநாட்டிற்குப் பிறகு அதே ஆண்டு மதுரையில் கருஞ்சட்டைப்படை மாநாடு. அண்ணு அவர்கள் அம்மாநாட்டில் பூர்ண பொறுப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. இதைக் கேட்டபோது எனக்குக்கூடக் கொஞ்சம் அதிர்ச்சியாயிருந்தது!

''பெயரும் பெருமையும் பெற்ற பிறகு அண்ணு கழகத்தைவிட்டு நழுவச் சதி செய்கிருர்!'' என்று அய்யாவை அணுகும் பலர் பேசுவார்கள். அது உண்மையோ என்கிற அய்யம் ஏற்பட்டது. அந்த மாநாடுமுடிந்ததும் எனக்கு

(11-ம் பக்கம் பார்க்க

கமலநாதனுடன் லைலா வருவதைக் காணத் துரைசிங்கம் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார்! இவ்வளவு விரைவில் எதிர்பாராத விதமாக அவள் கிடைப்பாள் என்று எண்ணவில்லை.

ஆனால் அவன் தன்னை அடையாளம் கண்டு கொள்ளாமலிருக்க என்ன செய்யலாம்என்று யோசித்தார். துப்பறியும் இலாகாவிலிருந்தவரென்பதால் குரலையும் முகத்தையும் கொஞ்ச நேரத்துக்குள் மாற்றிக்கொள்ளும் திறமை அவருக்குண்டு.

* * *

லைலா கமலநாதனுடன் வந்தபோது துரைசிங்கம் இல்லை! ஒரு கண் குருடாகிப்போன, ஒரு உருவம் அங்கேயிருந்தது. தான்

ஃ- தொடர்கதை -ஃ

யாரென்பதை லைலாவுக்கு சமிக்ஞையின் மூலம் உணர்த்திவிட்டு அவனைக் கொஞ்சநேரம் சும்மாயிருக்கும்படிச் சொன்னார் துரைசிங்கம்.

தனக்கு முன்பின் தெரியாத ஒரு ஆளிடம் கொண்டுவந்து சேர்க்கிறாளே என்று மிரண்டான் கமலா.

தான் விளையாட்டுக்குச் செய்யப்போய் இப்படி இனம் தெரியாத ஊரில் திருடன் என்கிற நிலையில் மாட்டிக் கொள்ளும்படியாயிற்றே என்று தன்னை நொந்துகொண்டான். அவன் வாழ்க்கையிலேயே இப்படி நொந்து கொண்டது இதுதான் அநேகமாக முதல்தடவையாயிருக்கும்! தன் மனதில் யாரைப் பற்றிய சபலநினைவோடு கல்கத்தா வந்தானோ அவள் எதிரிலேயேதிருடனாக நிற்பதென்றால்? தேளும் பாம்பும் கொட்டிய நிலையில் நின்றான் கமலா!

துரைசிங்கம் ஒன்றும் புரியாதவர்போல், "லைலா! யார் இது?" என்று அதட்டினார்.

லைலா, அவர் ஏன் அதட்டுகிறார் என்பதைப் புரிந்து கொண்டதால், அறைக்குள் நடந்ததையும் அவன் திருடவந்ததையும் எடுத்துரைத்தாள்.

கமலாவோ உண்மையை அவரிடம் உரைத்தான். விளையாட்டுக்குச் செய்தது வினையாகிவிட்டது, என்று நொந்து கொண்டான்.

லைலாவிடம், அவளைக் காண்பதற்காக, கல்கத்தா வந்ததாகச் சொன்னான். இப்படி அவள் சந்தேகப்படும்படியான ஒரு இக்கட்டில் மாட்டிக் கொள்ளும்படியான சந்தர்ப்பம் வந்ததற்காக, வருந்தினான். தான் யோக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றும், தன்னைப்பற்றித் தன் ஊருக்கு எழுதிக் கேட்டால் விபரம் தெரியும் என்றும் உளறினான் லைலாவிடம்.

"சரி! நாளைக்குக் காலையிலே கிளம்பற ரயிலிலே, உன் ஊருக்குக் கிளம்பு ரும். அங்கே போய் விசாரிச்சு, நீ ஒரு பித்தலாட்டாக்கா ன்னு தெரிஞ்சா என்ன தண்டனை கொடுத்தாலும் வாங்கிக்கிறியா?"

"வாங்கிக்கிறேங்க!" என்று அழாத குறையாகச் சொன்னான் கமலா.

"லைலா! ஆபிரகாமுடன் நாளைக்கு நீயும் ஊருக்குக் கிளம்ப ரெடியாயிரு. ஆபீசுக்கு லீவு எழுதிப்போட்டுடு..." என்று சொல்லிவிட்டு அவனைப்பக்கத்தி

அண்ணல்

லிருக்கும் அறையொன்றில் போட்டுப் பூட்டிவிட்டு, சாவியைக் கையில் வைத்துக் கொண்டார், துரைசிங்கம்.

அவனை அறையில் போட்டுப் பூட்டும்போது, லைலா**வின்** முகம் மாறியதை அவர் கவனிக்காமலில்லை. இலேசாக அவருடைய முகத்தில், ஒருபுன்சிரிப்பு இழைந்தோடியது.

* * *

இனியும் நான் இந்த விசித்திர சித்தனைப்பற்றி வளர்த்த விரும்பவில்லை! மூவரும் ஊர் சேர்ந்தனர் முன்னரே, தான் கமலாவைக் கண்டுபிடித்து விட்டதாக அருமைநாயகத்துத் தந்தி கொடுத்திருந்தார் துரைசிங்கம்.

அந்தத் தந்தியைக் கண்டதும் அருமைநாயகம் குதூகலப் பிறவீயானார்!

சோகமயமாகயிருந்த மகள் பாலாமணியிடம் போய்ச் சேதியைச் சொன்னார். மூடநம்பிக்கையால் துரைசிங்கம்செத்ததாக நம்பிய தன் தந்தையைக் கேலி செய்தாள் மகள்!

"என்னப்பா, பெரிய மிலிடரி காண்டிராக்டாகயிருந்தும், பேய் பூதம் என்று நம்பினீர்களே..." என்று கிண்டல் செய்தாள். மகள் முகத்தில் இவ்வளவு நாட்களுக்குப்பிறகு மலர்ந்த சிரிப்பு அவர் இதயத்தைக் குளிர வைத்தது.

ானகியின் சிற்றப்பாவுக்கும் சேதி சொன்னார். எல்லோரும் துப்பறியும் துரைசிங்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் அவர் வந்ததும், சிறையில் கிடந்த ஜானகி விடுவிக்கப்பட்டான். மாயமானை நம்பி மோசம்போனதைக் கேட்டு, அவனால் அவமானம் தாங்க முடியவில்லை.

தான் பட்ட அவதிகளை யாரிடமும் சொல்லிவிட வேண்டாமென்று துரைசிங்கத்தையும் லைலாவையும் கெஞ்சினான், கமலா...

குடும்பத்தோர் அனைவரும் குதூகலிக்கும் வகையில் துரைசிங்கம், பாலாமணியின் கைகளை ஜானகிராமனின் கைகளுடன் சேர்த்துவைத்து வாழ்த்தினார்! ஒன்றும் பேசாமல், பாலாவின் கரங்களைவிட மனமில்லாமல் பற்றிக்கொண்டான் ஜானகி! தங்கமிருக்கத் தான் சபலமனம் கொண்டு தரைப் புழுவுக்காக அலைந்ததற்குப் பிராயசித்தம் போல இருந்தது, அது.

லைலாவை அழைத்தார். ஆபிரகாம் அருகேயிருக்க, கமலாவின் கைகளுடன் அவள் கைகளை இணைத்து வைத்தார், துரைசிங்கம். உண்மையில், கமலா, ஆனந்தப்பரவசனாகி அடியற்ற மரம்போல் அவர் காலில் விழுந்தான்.

"அப்பா! எழுந்திரு. இந்த லைலா யார் தெரியுமா...... யாரென்று தெரிந்தாலும் மனைவியாக வைத்து ஒழுங்காகக் காப்பாற்றுவாயா?" என்றார் துரைசிங்கம்.

"நீங்கள் எது சொன்னாலும் சரி, லைலாவே; என் மனைவி..." என்றான், கமலா.

பிறகு ஆபிரகாமைப் பற்றி விளக்கினார், துரைசிங்கம். சாதி சமயம், சண்டை, பூசலற்று இருந்த ஆனந்த மயமான நேரத்திலே போலீஸ் இன்ஸ்பெக்டர் இரண்டு காவலர்களுடன் நுழைந்தார்! மணமக்களை ஆசீர்வதிக்கச் சொன்னார், துரைசிங்கம்.

ஆசீர்வதித்தபடியே, ஜானகி—கமலா இரண்டு பேருடைய கரங்களையும் பிடித்துக்கொண்டு "உங்கள் இரண்டு பேரையும் கைது செய்கிறேன்..." என்றார்.

கைதா! மறுபடியுமா!!—ஏக சமயத்தில் எல்லோரும் கேட்டனர்.

"துரைசிங்குக்கேத் தெரியுமே! இந்த இரண்டு பேரும், சர்க்காரை ஏமாற்றிய குற்றத்திற்காக இவர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அதன் சம்பந்தமாகவே, கைது செய்கிறேன் சர்க்கார் ஊழியர்களாகிய எங்களுடைய நேரத்தையும், நீதி மன்றத்தின் பொன்னான காலத்தையும் விரயமாக்கிய குற்றம் இவர்களைச் சார்ந்திருக்கிறது..." என்றார் இன்ஸ்பெக்டர்.

அத்தான்!—என்று ஜானகியிடம், ஓடிவந்தாள் பாலா.

சார்!—என்று துரைசிங்கிடம் ஓடினாள் லைலா.

"குற்றம் குற்றமே. அதற்கான தண்டனையை, கோர்ட் வழங்கும் தண்டனையை அவர்கள் அனுபவிக்கக்கடமைப்பட்டவர்கள். 3, 4 மாதங்கள் உள்ளே போய் வரட்டும்! அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான்" என்றார் துரைசிங்கம்.

கலங்கிய கண்களோடு நின்றனர், பெண்கள். தாங்கமுடியாத வேதனையோடு ஜானகியும் கமலாவும் போலீஸ் 'வானுக்குள்' ஏறினர். 'வான்' போயிற்று! புழுதி கிளம்பி, லைலா, பாலாவின் கண்ணீர்க் கண்களை மறைத்தது !!

—ஃ—முற்றும்—ஃ—

நாஜிசம்

அறுபது லட்சம் பேரைக் கொன்ற காதகன் ஈச்மென்! அவனுக்கு குருநாதர் போல விளங்கிய ஹிட்லர்! அந்த ஹிட்லரை, தேவதூதன் என்று கொண்டாடிய மக்கள்! அந்த மக்கள் மனதிலே உலகத்தையே வெல்ல வேண்டுமென்கிற ஓர் ஆசை! அந்த ஆசை எழும்புவதற்குக் காரணமான "நாமே உயர்ந்தவர்கள்" எனும் ஒருவித வெறி!! அந்த வெறியின் விளைவால் மூண்ட மாபெரும் உலகப் போர். அதனுல் மாண்டுமடிந்த கோடிக்கணக்கான மக்கள். இடிந்த மாளிகைகள். எரிந்த இல்லங்கள். இழந்த செல்வங்கள். ஐரோப்பாவே அதிர்ச்சி பெற்ற குட்டைபோலக் குழம்பிய கோரம். போலந்து—பிரான்சு—பின்லந்து—அங்கேரி போன்ற நாடுகள் அடிமையாக்கப்பட்டன. அகில உலகமே ஆடியது. ஜெர்மானியரின் குண்டுகளுக்காக பிரிட்டிஷ் தீவே இருள் மயமாகியது. எங்கும் குழப்பமும் கூச்சலும்.

இப்படிப்பட்ட ஹிட்லரை விட்டால் என்ன ஆவது என்று உலகத்தலைவர் எல்லாம் மிரண்டனர். ஜெர்மானிய நாட்டு சப்மரீன்கள் உலவாத கடல்கள் இல்லை-அவர் தம் விமானங்கள் சுற்றிவராத இடமில்லை—சென்ருர்கள், வென்ருர்கள் என்கிற சேதிகளே ஏடுகளை நிரப்பின.

'நேச நாட்டுப்படை வெற்றிகரமான வாபஸ்!' என்கிற சேதிகள், ஒவ்வொரு நாளும். ஒரு பெரியதொரு அணிவகுப்பே, தேவைப் பட்டது, அந்த ஹிட்லரைச் சாய்க்க.

அமெரிக்காவும், பிரிட்டனும், ருஷ்யாவும் சேர்ந்து ஐக்கிய அணிவகுத்தன. அந்த வல்லரசுகளுக்கு உலகிலுள்ள பல நாடுகள் துணை போயின. உலகைக் கப்பிவரும் பயங்கரமான நாஜிசத்தைச் சாய்க்க வேண்டுமென, சர்ச்சிலும், ரூஸ்வெல்டும், ஸ்டாலினும் கூடிப் பேசினர். இரு முனைப் போர்துவங்கியது! ஒரு முனையில் ரஷ்யா—இன்னெரு முனைகள் நேசநாடுகள். இத்தாலியிலிருந்தமுசோலினி, ஹிட்லரின் தோழனுயிருந்தான்! சின்னஞ் சிறு தீவு ஜப்பான், தன் ஆர்வத்தைத் துணைக்கொண்டு இந்தியாவின் எல்லைவரையிலுள்ள நாடுகளை 'கபளீகரம்' செய்து கொண்டிருந்தது!

இத்தாலி—ஜப்பான் இப்படியொரு நேச அணியை உருவாக்கிக் கொண்டான் ஹிட்லர். புதிய புதிய குண்டுகள் முளைத்தன! இருந்த இடத்திலிருந்து பறக்க விடப்படும் எரிகுண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன!

கடற்படையொரு பக்கம்! கப்பற்படை கடலில்! ஆகாயத்தில் விமானப்படை! பறவைகளைப் போல் பறந்துவரும் விமானங்கள்—அலறும் சங்கு—மட மடவென விழும் குண்டு—ஓவென்று மக்களின் குரல்—தீயின் கோரநாக்கு பட்டு, சிதைந்தன பல நகரங்கள்!!

அரங்கண்ணல்

இவ்வளவும் செய்த ஹிட்லர் கடைசியில் கண்டதென்ன? எப்படிச் செத்தான் என்பதே இன்னும் தெரியாது! அவனும் அவன் காதலி ஈவாவும், ஒன்ருகியிருந்து கொண்டு நஞ்சை அருந்த மாண்டனர், என்பர்.

இல்லை—அவனே முதலில்காதலியைக் கொன்றுவிட்டு, பிறகு தானும் சுட்டுக்கொண்டு மாண்டான் என்பர்.

எங்கே செத்தான், எப்படிச் செத்தான், எப்படி உயிர் போயிற்று எனறு உலகத்துக்கே தெரியாதபடி அகில உலகையும் ஆட்டிப்படைத்த ஹிட்லர் பிணமானுன்! அவன் உயிரோடு இல்லை என்பது உலகம் ஒப்புக் கொண்டுவிட்ட உண்மையாகும்!!

அவனுக்குத் தோள் கொடுத்த பாசிசத்தலைவன் முசோலினி, கைதியாகி துப்பாக்கிகள் பல அவன் உடலைத் துளைக்க, தண்டனை விதிக்கப்பட்டு கொல்லப் பட்டான். ஹிட்லருடைய சகாக்கள் பலர் கைது செய்யப்பட்டு நியுரம்பெர்க் எனுமிடத்திலே நேச நாடுகளால் நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் முன்னிறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்டனர். அப்படிப் பட்ட விசாரணையில்தான் அகப் படக்கூடாது என்றெண்ணியே ஈச்மென் மாயமாய் மறைந்தான்!

அவனைத் தவிர ஹிட்லரின் ஆட்சியில் ஆட்டம்போட்ட ஏனைய சகாக்கள் எல்லாம் கைது செய்யப்பட்டனர். உலகையே அதிரச் செய்த உன்மத்தர்கள் சிறைக் குள்ளே தள்ளப்பட்டனர். நீதியின் முன்னிறுத்தப்பட்டனர்.

கோயரிங் என்பான் ஹிட்லரின் முதல் சகா! நாஜிச ஆட்சியில் இவன்தான் இரண்டாவது சர்வாதிகாரி! ஜெர்மனியில் போடப் பட்ட நான்காண்டுத் திட்டத்தின் காவலன்!!

வான்ரிப்பன்டிராப் வெளிநாட்டு மந்திரி! ஹிட்லரைக் 'காக்கா'ப் பிடித்து வைத்திருந்தான் என்பர்! உலகப்போர் மூள இவனே, ஹிட்லருக்கு உறுதுணையாயிருந்தான்!!

ருடால்ப் ஹெஸ் போர் நடை பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் ஹிட்லர் அனுப்பியதாகச் சொல்லி ஒருநாள் 'பாரசூட்' மூலம் இங்கிலாந்தில் இறங்கினுன், போர்முடியும்வரைஇவனைச் சிறையில் வைத்து வழக்கு மன்றம் கொண்டு வந்தனர். பைத்தியக்காரன்போல நடித்து எல்லோரையும் ஏமாற்றினுன். இவனுக்கு தூக்கு அளிக்கப்படாததால், இப்போது ஜெர்மானியிலுள்ள ஒரு சிறையில் ஏனைய போர்க் கைதிகளுடன் ஆயுட் தண்டனை அனுபவித்து வருகிருன். இந்தக் கைதிகள் கிடக்கும் சிறைச்சாலையை நேச நாடுகளின் (அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன்) படைகள் ஒவ்வொரு தடவையென்று "முறை" வைத்து பாதுகாத்து வருகின்றன.

சென்ற வாரம் இந்த ஹெஸ்ஸைப் பற்றிகூட ரசமான செய்தியொன்று வந்தது.

"ஐயோ, பாவம்! பெரிய ஆளாயிருந்தவனுயிற்றே!" எனும் அனுதாபத்தால் காவல் காக்கும் வீரர்கள் அவன் ஏதாவது கேட்டால்கொடுப்பதுண்டாம். சிறைக் குள் மிகவும் அருமையான பொருள் சிகரெட்டுதானே! அப்படி கொடுக்கப்படும் சிகரெட்டைப் பிடித்துவிட்டு அதன் துண்டுகளை பெரிய சிறையதிகாரி வந்தால், "பார்த்தீங்களா! எல்லாம் உங்க ஆட்கள் கொடுத்தது தான்" என்றுசொல்லி அந்த ஆட்களை அதிகாரிகள் திட்டுவது கேட்டு ஆனந்தமடைகிருனும்.

கால்டன் ப்ரன்னர் ஈச்மென் வரலாற்றில் இடம் பெற்றவன் இவன்! ஹிம்ளரின் சகாவாயிருந்தவன்!

ரோசன் பெர்க் நாஜித்தத்துவப் பிதா என்றழைக்கப்பட்டவன்.

ஹன்ஸ் பிராங்க் ஹிட்லரின் சட்ட நிபுணனுகவும் பிறகு போலந்தின் கவர்னர் ஜனரலாகவும் இருந்தவன்.

வெல்கம் பிரிக் உள்நாட்டு மந்திரியாயிருந்தவன்.

பிரிட்ஸ்சாகல் தொழிலாளர் மந்திரியாயிருந்தவன்.

ஆல்பர்ட்ஸ்பீர், ஜால்பர்சாசட், வால்டர்பங்க், வான்பேபன் (ஹிட்லர் பதவி பெறுமுன் ஜெர்மனியின் குறிப்பிடக்கூடிய ஆளாயிருந்தவன்) நாஜி ஆட்சியின் ஆரம்ப காலத்தில் வெளிநாட்டு மந்திரியாயிருந்த வான்நியுராத், ஹிட்லர் இளைஞர் சங்கத் தலைவான் வான் சிராச், ஆந்தர் இன்குவார்ட் — ஆஸ்ட்ரியாவுக்கு ஜெர்மனி சார்பில் தலைவனுயிருந்தவன், நாஜி ஜெர்மனியின் நம்பர்1 யூத வெறுப்பாளனுனஜூலியஸ் ஸ்ட்ரெய்ச்சர், இராணுவ மார்ஷல் கெய்டல், ஜெனரல் ஜோடல், ஜெர்மனியின் கப்பற் படைதலைவரான அட்மிரல்டோனிட்ஸ், விளம்பர இலாகாவின் வானெலிப் பிரச்சாரத் தலைவனுன ஹன்ஸ்பிரிட்ஸ்சே முதலானோர் அந்த நியுரம்பர்க் வழக்கில் குற்றவாளிக் கூண்டிலே நிறுத் தப்பட்டார்கள்.

ஹிட்லரின் மிக முக்கியமான சகாவான கொயபெல்சும் ஹிட்லரைப்போலவே தற்கொலைசெய்து கொண்டு விட்டான், ஆதலால் நாஜிசத்துக்காக உலகப்போரை தூண்டி இல்லாத அட்டூழியங்கள் செய்தவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டனர்.

சரிதப் பிரசித்திப்பெற்ற இந்த வழக்குபற்றி உலக வரலாற்றை அறிய விரும்புவோர், தெரிந்து கொள்ளவேண்டியதாகும். வழக்கின் முடிவில் ஹெஸ், பங்க் முதலியோருக்கு ஆயுட் தண்டனையும், அட்மிரல்டோனிட்ஸுக்கு பத்துஆண்டுக் காலச் சிறை வாசமும், வான்பேபன் பிரிட்ஸ்செ ஆகியோருக்கு விடுதலையும், முக்கியமான பிறருக்கெல்லாம் தூக்கும் உத்திரவிடப்பட்டது. எத்தனையெத்தனையோ உயிர்களை என்னென்னவோ செய்த அந்தக் கொடுங்கோலர்கள், தண்டனையைக்கேட்டு சிறைக்குத் திரும்பி வந்தபோது, பேசிய பேச்சும், விட்டபெருமூச்சும் வடித்த கண்ணீரும், கொஞ்சமல்லவாம்! அந்தக் கைதிகளுடனேயே பழகி அவர் தம் மனநிலையையும் ஏனிப்படிப்பட்ட வெறித்தனங்களில் ஈடுபட்டார்கள் என்பதையும் அவர்தம் வாயிலாகத் தெரிந்துகொண்டு அதை வருங்கால உலகுக்கு அறிவிக்க வேண்டுமெனும் உன்னதமான நோக்கோடு நேசநாடுகள் ஜீ. எம். ஜில்பர்ட் எனும் உளநூல் அறிஞரைப் பணித்திருந்தன.

(தொடரும்

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்
ஒளி - 1 வெள்ளி 18-8-61 கதிர் - 25

நமக்கோர் சோதனைக்காலம்!

மழைக் காலத்து காளான் மாதிரி—மிக மிகச் சிறிய கட்சி—நானே கவனித்துக் கொள்வேன்—தேர்தலுக்குப் பிறகு இருந்த இடம் தெரியாமல் சிர்குலையப் போகிறது—என்று திருவாளர் காமராசர் அவர்கள், சென்ற கிழமை டில்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே செப்பினராம்! உத்திரப் பிரதேசத்தாரும், பீகார் முதல் வரும் இன்னும் பெரியவர்களும் கூடிப் பேசிய அக்கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தை தடை செய்வதுபற்றி வற்புறுத்தியபோது, ,நான் பார்த்துக் கொள்கிறேன். தன்னாலே அழியும்' என்கிற வீரமொழிகளை உதிர்த்திருக்கிறார் நமது விவேகியான முதலமைச்சர்!!

*   *   *

'அக்கா வந்து கொடுக்க, சுக்கா, மிளகா, சுதந்திரம்?' என்ற புரட்சிக் கவிஞரின் வரிகளை மறந்தவர்களல்ல நாம். பொழுது போக்குக்காகவோ, புகழ்மாலைகளைப் பெறுவதற்காகவோ, கைதட்டுதல் பெற்றுக் களிப்பதற்காகவோ, கட்சி கண்டவர்களல்ல நாம். இச்சை மொழி பேசி 'வச்சை'யாக வாழ அரசியல் நல்லதொரு வியாபராம் என்பதற்காக ஒன்று சேர்ந்தோருமல்ல. அழகு மொழி பேசவும், அதற்கேற்றப் புகழ் பெறவும், சிறந்ததொரு சாதனம் என்பதற்காக இந்த விடுதலைக் கூடத்திலே அடியெடுத்து வைத்தவர்களுமல்ல. நன்றாக நாம் அறிவோம்.

சுதந்திர இயக்கம் என்பது எப்படிப்பட்ட சோதனைகளுக்கெல்லாம் விடுதலைத் தாகம் கொண்டவர்களை அலைக்கழிக்கும் என்பதை, அதனைபிறருக்கு அறிவுறுத்தவும், அத்தகைய உணர்வை நம்முடைய கூட்டுத் தோழர்கள் அடைந்திடல் வேண்டுமென்பதற்காகவுவே, விடுதலையெனும் அற்புதமான சொல்லைப் பெற உயிரைக் கொடுத்த உத்தமர்களின் வரலாறுகளை நாம் அடிக்கடி எடுத்துக்காட்டி வருகிறோம். இந்த நூற்றாண்டில், ஆதிக்க புரியை எதிர்த்து, சுதந்திரக்கொடி தூக்கிய விடுதலை இயக்கங்கள் உண்டு! அந்த வகையிலே, வெள்ளையரிடமிருந்து அதிகார மாற்றம் பெற்ற காங்கிரஸ் இயக்கம் பட்டபாடு, அப்பப்ப, சாதாரணமானதன்று. எத்தனையோ பேருக்குக் குண்டடிகள், தலையுடைந்தோர் பல்லாயிரம், தடியடிக்கு ஆளாகியோர் இலட்சோப லட்சம், செக்கிழுத்தார் சிதம்பரனார், தீவாந்திரசிட்சை பெற்றார் வீர சவர்க்கார் இருக்குமிடம் தேடியலைந்தார் அரவிந்தர், மாறுவேடப போட்டு உலவினர் சுப்பிரமணிய சிவா, புதுச்சேரியே அடைக்கலமென வாழ்ந்தார் பாரதியார், திருப்பூர் குமரன் வீதியில் மாண்டார், பஞ்சாபில் பகத்சிங்—ராஜகுரு—சுகதேவ்—எனும் மூன்று இளைஞர்கள் தூக்கிலே தொங்கினர், ஜாலியன் வாலா பாக்படு கொலை, வெள்ளையனை ஒழிக்க வேண்டுமென்று வீர கங்கணம்கட்டிக்கொண்டு சிட்டகாங் எனுமிடத்திலே துப்பாக்கியேந்தியபடி உருவான புரட்சிகர இயக்கவாதிகள்—அவர்கள் பட்டபாடுகள், ஆண்டு நான்கு உனக்கு என்று ஆளும் பிரதமராக இன்றிருக்கும் நேரு அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறைத்தண்டனை, ஆற்றல் வீரர் சுபாஸ்சுக்கு அந்நியர் துணைபெற்றாயினும்அழிக்கவேண்டும்ஆதிக்கத்தை என்று ஏற்பட்ட வீரம், உதை—அடி—குத்து என்கிற உத்வேக உணர்ச்சிஒவ்வொருவருக்கும்ஏற்படுகிற அளவில் உண்டான அடக்குமுறை தாண்டவம்,அன்பர்ஜயப்பிரகாசரிடமிருந்து புலன்விசாரணை செய்ய 'ஐஸ்'கட்டியில் உட்காரவைத்த அதிர்ச்சி மிகு நிகழ்ச்சி, ஆங்காங்கே சதிவழக்குகள், இராஜத்து வேஷ வழக்குகள்...அப்பப்பா, நாம் அவைகளை மறக்கவில்லை!

இந்தியச் சுதந்திர நாளை இந்த 15ந்தேதி காங்கிரசார் ஆங்காங்கே கொண்டாடிய நேரத்தில் அவர்கள் மறந்திருந்தாலும், நம்முடைய உள்ளம் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அந்த ஒவ்வொன்றிலும் பங்கேற்றுக் கொண்ட தேசபக்தர்களின் தீவிரமான இதயத்தையும் எண்ணாமலில்லை!!

காந்தியடிகளின் குரல் கேட்டு கல்லூரி வாழ்வை உதறித்தள்ளி விட்டு வந்தோருண்டு! கனமும் தனமும் பெற்றுக் கொண்டிருந்த பிரகாசம் போன்ற ஆந்திர கேசரி போன்றோர் வக்கீல் வேலையை விட்டு ஓடிவந்தனர்! ஒருதடவை சைனாவுக்கு இந்தியத் தேசீய உணர்ச்சியின் சார்பில் பணிபுரிய ஒரு டாக்டர்குழு தேவையென்ற போது, பல டாக்டர்கள் வருவாயையும் இழந்து வந்தனர் சேவை செய்ய!!—

இந்த நூற்றாண்டின் விடுதலை இயக்கங்களில், காங்கிரசுக் கட்சி ஆளான அடக்கு முறைகளையும் அந்த அடக்கு முறைகளைத் தாங்க அந்த இயக்கம் பெற்ற சக்தியினையும் எழுத இடம் போதாது; ஏடும் பற்றாது.

காளான் மாதிரி—நெல்லிக்காய்மூட்டைகள்—தன்னாலே ஒழியும்—என்று, இன்று எப்படி காமராசர் அவர்கள் திருவாய் மலர்ந்து செப்பியிருக்கிறாரோ, இதே போலத்தான் அன்று காங்கிரஸ் இயக்கத்தின் தூய்மையான வளர்ச்சியை அமெரிதுரையும் சர்ச்சில் கோமகனும் வர்ணித்தனர்! இடந்தேடிகள், நுழைந்து கெடுப்போர், காலைவாரி விடுவோர் முதலிய கும்பல்களை உற்பத்தி செய்வதன் மூலமும், இன்னும் பல வழிகளிலும் எப்படிக் காங்கிரசை ஒழிக்கலாம் என்று சதி செய்தபடியே சங்கநாதமும் செய்தனர்' இடமும் காலமும் மாறியிருக்கிறதே ஒழிய—அதே வாசகங்களைத்தான் அன்பர் முதலமைச்சரும், நம்மைப்பற்றி அருளியிருக்கிறார்! இந்த நாட்டின் விடுதலை தாகத்தை அருவிபோல ஊற்றெடுக்கச் செய்திருக்கும் நாம், மழைக் காலத்துக் காளான்களாம்—தேர்தலோடு ஒழியப்போகிறவர்களாம்—சின்னவர்களாம்—சிந்திக்கவேண்டிய அளவுக்கு யோக்கியதை இல்லாதவர்களாம்!!

உண்மையில் உள்ளத்தில் அப்படிக் கருதுகிறார் என்றால், எது எப்படிப்போனால் என்ன என்றன்றோ இருக்கவேண்டும். இருக்கவா செய்கிறார் காமராஜ்? அங்கே என்ன, இங்கே என்ன, மதுரையில் எவன் சிக்குவான், மானாமதுரையில் எவன் அகப்படுவான், மன்னார்குடியில் என்ன தகராறுவரும், சென்னைப் பட்டிணத்தில் யாரை விட்டு சிண்டு முடிந்துவிடலாம், 'போஸ்டர்கள்' ஒட்டாமல் தடுத்துவிட்டால் விளம்பரம் கிடைக்காதல்லவா, அதிக நேரம் 'மைக்' அனுமதியில்லாமற் செய்தாலென்ன...இப்படி சதா சர்வ காலமும்—ஆட்சியைப்பற்றி அடுத்தடுத்துஇருக்கும் அமைச்சர்கள் கவனித்துக் கொள்வார்கள் எனும் கருத்தில்—அன்பர் காமராசர் அவர்கள், இங்கே ஆட்டம் போடுகிறார், அனுதினமும் அவருக்கு நம்மைப் பற்றி சிந்தனைதான்! என்ன செய்யலாம் என்ற யோசனைதான்! காங்கிரஸ் சார்பில் இம்மாநிலத்தைப் பிரகாசம் ஆண்டார். ஓமந்தூரர் உத்தமர் எனப் பெயர் பெற்றுச் சென்றார், குமாரசாமி கோலோச்சினார் அவர்களிடமெல்லாமிருந்த சகிப்புக் குணமும்பெருந்தன்மையும் எதிர்க்கட்சிகளின்பால் இல்லாதஇவர்—எனும்பட்டத்தை வழங்குகின்றனர் நல்லோர்.

கிடைத்த பதவியின்மூலம் நாட்டு வளர்ச்சிக்கல்ல கட்சி வளர்ச்சிக்கு என்னென்ன செய்யலாம், யாரை வலைபோட்டு விழுங்கலாம், எந்தந்த ஊரில் எங்தெந்த வகையில் இடந்தேடிகளை வீழத்தலாம் என்பதே இன்றைய தினம் இம்மாநிலத்தை யாளும் மகிபரின் செயலாகயிருப்பதை எவரும் அறிவர்! நம்மைவிட காங்கிரஸ் நண்பர்களே நன்றாக அறிவர்!! அதிலும் தேர்தல் நெருங்க நெருங்க திருமிகு காமராசர் அவர்களின் கவனம், காங்கிரஸ் கட்சியின் மீதுள்ளதே தவிர, ஆட்சியின் பாலில்லை.

காங்கிரசுக்கு அடுத்தபடியாயிருக்கும் எதிர்கட்சியான நம்மை எப்படி வீழ்த்தலாம் என்கிற ஆர்வமும் வேகமும் அதறகான ஆள் பிடிக்கும் வேலையும் மும்முரமாயிருக்கிறதே ஒழிய, மூன்றாவது ஐந்தரண்டு திட்டத்தில் இன்னும் என்ன சலுகைகளைக் கேட்கலாம், எப்படியெப்படி நாட்டு மக்களுக்கு நன்மை செய்து கொடுக்கலாம் என்று எண்ணுகின்ற விதத்தில் இல்லை. அந்தளவுக்கு அவருடைய மனதை தி. மு. கழகம் குடைகிறது! ஆனாலும், காளான் மாதிரி—நான் பார்த்துக் கொள்கிறேன்—என்று, அங்கே ஆணவத்தோடு பேசியிருக்கிறார்!!

*   *   *

டில்லி முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்மைப்பற்றிப்பேசபபட்டதிலிருந்து, இரண்டு உண்மைகள் விளங்குகின்றன.

ஒன்று: நாம் அலட்சியப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்கிற நிலைமை மாறி நம்மை அழிக்க வேண்டும் எனும் கட்டத்துக்கு வடநாட்டு முதல்வர்கள் வருகிறார்கள்!

இரண்டாவது: அப்படி அழிக்கும் கைங்கரியத்தைச் செய்ய அன்பர்காள், உங்களுக்குச் சிரமம் தேவையில்லை நானிருக்கிறேன் — பார்த்துக்கொள்ள, என்று கூறும் காமராசர் நம்முடைய முதலமைச்சராக உள்ளார்!!

ஆதிக்கபுரியினர் விடுதலையுணர்வைக் கண்டு மிரளும்போது அழித்து ஒழிக்க வேண்டுமே இப்படிப்பட்டவர்களை என்கிற அவசரத்துக்கும் ஆர்வத்துக்கும் ஆளாவர். உடனே அவர்களுடைய எண்ணத்தில் "தடை போட்டால் என்ன" என்பதே உருவெடுக்கும்! அதிகாரம் உள்ளதல்லவா கையில்? அம்பை எடுத்து வீச வேண்டியதுதானே!! அப்படிப்பட்ட அவசரம் வடநாட்டு முதல்வர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது இப்போது—ஆங்கிலேயப் பிரபுக்களுக்கு அன்று ஏற்பட்டதுபோல. அதனைக் கேட்ட காமராசர் அவர்கள், "அடடா! அப்படியெல்லாம் பொதுதேர்தல் நேரத்தில் போட்டால் நல்லதல்ல," என்று சொல்லியிருக்கிறார். மனக்கண்ணில் புரியுமே, அப்படியொரு தடை போடப்பட்டால், தமிழ் மாநிலத்தில் காங்கிரஸ் பெற்றுவரும் பேருக்கு, என்ன பரிசு கிடைக்கும் என்பது! அதனால், "இப்போது தேவையில்லை" என்றிருக்கிறார்!! அதற்கு அவர் காட்டியுள்ள காரணம், காளான் மாதிரி—தேர்தல் முடிந்ததும் அவர்களே அழிந்து விடுவார்கள்—என்பது.

விளையாட்டுக்காக காமராசர் அப்படிச் சொல்லவில்லை—கழகத்திலிருந்து சிலபேர் விலகிச் சென்றதையும், 'கன்னா பின்னா'வென்று பித்தலாட்ட ஏடுகள் வளர்த்துவரும் குழப்பங்களையும் கண்டு, காமராசர் கணக்குப் போடுகிறார், நாமே நம்மை அழித்துக் கொள்வோம்!— என்று.

வீடு எரியும்போது, நமது சக்தியானுசாரம் அந்த மூலையில் கொஞ்சம் இந்த ஓரத்தில் கொஞ்சம் என்று 'பெட்ரோலை' ஊற்றி ஒரேயடியாய் சாம்பலாக்கி விடலாம் என்று கனவு காணுகிறார். அந்தக் கனவுக்கு நாம் என்ன பதில் தரப்போகிறோம் என்பதிலேயே நம்முடைய எதிர்காலம் இருக்கிறது! ஓடித் தாக்குவது ஒரு வகை. ஒளிந்திருந்து ஒழிப்பது இன்னொரு விதம். முதல் விதம், முரட்டுத்தனமானது! இரண்டாவது வகை சாகசமானது!! சிண்டு முடிதல்—ஊரை இரண்டாக்குதல்—திடீர் திடீரென்று முக்கியமானவர்கள்மீது ஏதாவது வழக்குப்போடுதல்—முதலிய முறைகள்—சாகசவகையைச் சார்ந்ததாகும். அந்த வகையினைச் செவ்வனே செய்தால் நம்மை நாமே அழித்துக் கொள்வோம்—இன்னும் பல சம்பத்துகள் எற்படுவார்கள்—என்றெண்ணுகிறார் காமராசர்!

அதற்கான சூழ்நிலை தேர்தலின் முடிவில், தெளிவாகும்—தேர்தலுக்கு ஆள் நிறுத்தப்படும்போது, 'அவனை நிறுத்தினாய், எனக்கு இடம் கொடுக்கவில்லை' என்கிற பூசல்கள் உண்டாகி வெற்றி பெறுமல் கழகத்தைச் செய்துவிடும்—அதன் காரணமாய் தேர்தலிலும் தோற்று, கழகமும் பலவாகி, கரைந்து வங்காளக் குடாக் கடலில்போய் சமாப்தி ஆகிவிடும்! தான் வழக்கம் போல, சந்தன மார்பினனாய், சகலவித வசதிகளையும் பெற்ற சர்வாதிகார பூஷிதனணாய் விளங்கலாம் என்று எண்ணுகிறார் காமராசர்!! அந்த எண்ணத்துக்கு சரியான, பலமான சம்மட்டியடி கொடுக்க வேண்டும், நாம். சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்று பெருவாய் திறந்து கழுகு காத்துக் கொண்டிருக்கிறது! கிளிகள், கூட்டுக்குள்ளிருந்து, அங்கொன்றும் இங்கொன்றும் போகுமென்று அறிந்திடின், கொத்திக் கொள்ளலாம் என்று கழுகு சமயம் பார்க்கிறது!!

கழகச் சகோதரர்களே—அந்தக் கழுகுக்கு என்ன பதில் தரப் போகிறோம், நாம்? எண்ணுங்கள் ஒவ்வொருவரும்.

இயக்கம் ஒருவர் இருவராய் ஊரூருக்கும் இருந்தது போலிருந்திருந்தால் கவலையில்லை—பெரியார் அவர்களைப்போல தினம் ஒருவிதமாய், நாமும் காலத்தைக் கழித்துவிட்டுப் போய்விடலாம். ஊரூருக்கும் பலராகியிருக்கிறோம்! பலதரப்பட்டோரும் சேரும், சமுத்திரம் போலாகியிருக்கிறது கழகம்!! அலைகளைக் காணும்போது, ஆதிக்கக் கப்பல் நிச்சய கவிழும் என்கிற ஆனந்தம் நமக்கு உருவாகிறது, ஆனாலும் கரைகளையுடைக்குமளவுக்கு அலைகளின் ஆர்வமும் வேகமும் போய்விடக்கூடாது. பலதரப்பட்டோர் ஒன்றுகூடும் போது, கருத்துமாறுபாடுகள் ஏற்படக்கூடும்! அவைகளை சண்டை போடும் குண்டுகளாக மாற்றிக் கொள்வது குறுமதியாகும்!!

கொள்கையால் கூடினோம்—கொள்கையால் பிணைந்தோம்—கொள்கையை வளர்ப்போம் மாறுபாடு மறையும் உடனே—மறவர்யாம் எனும் குணத்தை இழக்கோம்—மாற்றான் கேலி செய்யும்விதத்தில், சந்தைக்கடைப் பொருளாக ஆக்கிவிடமாட்டோம் கழகத்தை!! என்கிற உத்வேகத்தை ஒவ்வொருவரும் கொள்ள வேண்டிய கட்டம் இது. அப்படிப்பட்ட உணர்ச்சியைப்பெற்று, அடுத்துவரும் தேர்தலில், எவர் வென்றாலும் என் கழகம் வென்றது என்பதைக் காட்டுவேன் இந்தக் காமராசருக்கு, என்று நாம் ஒவ்வொருவரும் உறுதிகொளல் வேண்டும்!

அறிகுறி தெரிகிறது—அடக்குமுறைச் சவுக்கு தயாராவதை அறிகிறோம்—கைகளில் விலங்குடன் கழகத்தை சிறைக்கூடத்துக்குள் பூட்டாமல் விடப்போவதில்லை காமராசர்கள்—

"என்னய்யா, காளான் மாதிரி என்றாய்! கடும்புயல் போல இத்தனைபேர் எம். எல். ஏக்களாகவும் எம். பி.க்களாகவும் வந்து விட்டனரே, இனி என்ன? நாங்கள் சொன்னபடி போடவேண்டியதுதானே தடை!" என்று கேட்டார்கள் டில்லியினர்.

அச்சம் அவர்களை விடாது! காமராசரையும் துக்கம் துளைக்கும்!! இரண்டும் கலக்கும்போது, என்னென்ன அடக்குமுறைப் பாணங்கள் கிளம்பும் என்று சொல்ல முடியாது.

ஏடுகள் தடை செய்யப்படலாம்.
சொத்துக்கள் பறிமுதலாகலாம்.
'திடீர்' வழக்குகள் முளைக்கலாம்.
'தீவாந்திரம்' கிடைக்கலாம்.
'ஜன்ம தண்டனைகள்' அளிக்கப்படலாம்.
மாகாணத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படலாம்.
கழகங்கள், பலாத்காரமாக மூடப்படலாம்.
பாதுகாப்புச் சட்டம் பாயலாம்.

இவர்களை, அன்று என்னென்ன கொடுமைகளுக்கு வெள்ளையன் ஆளாக்கினானோ அவ்வளவு கொடுமைகளையும் நம்மீது வீசலாம்! அப்படியொரு கட்டம் வராது வராது, இதெல்லாம் சும்மா என்று கருத வேண்டாம் தோழர்களே—ஒரு விடுதலை இயக்கத்தில் இப்படிப்பட்ட கட்டம் வராமல் போகாது. இத்தனை நாட்களும் வராமலிருந்ததென்றால், அதற்குக் காரணம், நம்முடைய வளர்ச்சியின் அளவும் விளைவும் அவர்கட்குப் புரியாமலிருந்தது. இனியும் அவர்கள் விடமாட்டார்கள்!

வேதனைகளை, விடுதலைபுரியினராகிய நாம், தாங்கத்தான் வேண்டும்!: அப்படிப்பட்ட விலைகளைக் கொடுக்காமல், எந்த இலட்சியமும் வெல்ல முடியாது, அருகிலிருக்கிறது ஜோமோ கென்யாட்டா விடுதலையான செய்தி, அவர் பத்தாண்டுகள், சிறைக்குள்ளே பூட்டப்பட்டுத் திறந்து விடப்பட்டிருக்கிறார். அதே போல, நமக்கும் ஏற்படலாம். அப்படியொரு கட்டம் ஏற்படுவதுதான் ஒரு விடுதலை இயக்கத்துக்கும் கவுரமாகும். அதனைத் தாங்க, அருமைச் சகோதரர்காள் இப்போது முதலே தயாராகுங்கள்!

உலகம் கேட்க வேண்டும்— ஒரு 50 சட்டசபை உறுப்பினர்கள், பத்து எம். பிக்கள்—சிறைக்குள்ளே பூட்டப்பட்டனர்—அவர்கள் தனிநாடு கேட்டார்களாம்—தவறு என்று பிடிக்கப்பட்டுச் சிறைக்கனுப்பப்பட்டார்கள்—என்கிற சேதியை!! அத்தகைய உள்ள உரமும், செயல்திறனும், எதையும் தாங்கும் இதயமும் நமக்கு வேண்டும். நிச்சயமாக விடப்போவதில்லை. வடபுலத்து அரசு நம்மை. தனிநாடு வேண்டும் என்று பேசினாலே மூன்றாண்டுத் தண்டனை என்கிறார்கள்.

அதிகாரம் கையிலிருக்கையில், சட்டமா போட முடியாது? ஆள்தூக்கிச் சட்டம் இன்னும் இருந்து கொண்டுதானே உள்ளது! ஆகவே தோழர்காள் இப்போது முதலே 'எதற்கும்' தயாராயிருங்கள்—நம்முடைய கழகத்திலே குடும்பங்களைக் காக்க வேண்டியோர், உழைத்தால்தான் பிள்ளைகுட்டிகள் வாழ முடியும் என்ற நிலையிலிருப்போர் உடல் நலம் தாங்காதே என்று வருந்துவோர் என்று பலருண்டு. அப்படிப்பட்டோர், நேரடித் தொடர்புகளைக் குறைத்துக் கொள்ள ஆரம்பிப்பது நல்லது! ஆமாம் எங்களுக்குமட்டும் தியாகத் தழும்புகள் வேண்டாமோ—என்ன சுயநலம் உனக்கு—காரித்துப் பாரோ மக்கள்—எனக் கேட்கக்கூடும் அவர்கள்!!

படை படையாகப் பலர் போகும்போது நமக்கில்லையே அந்த வாய்ப்பு என்று அவர்தம் உள்ளங்கள் குமுறும். ஆனால் அப்படி ஒதுங்குகிறவர்களும் ஒருவகையில் நமக்குப் பணிபுரிகிறவர்களே! எல்லோரும் உள்ளே போய்விட்டால், அவர்களுக்கானவைகளைச் செய்யும் உன்னதப் பணியினை நாம் செய்வோம், ஒரு விடுதலை இயக்கத்துக்கு அதுவும் தேவை, என்றுகருதி இப்போது முதலே தத்தமது தீவிரப்பணியினைக் குறைத்துக் கொள்ளல் நலம்!'

ஆமாம் தோழர்களே, அழைப்பு வரப்போகிறது நமக்கு—அந்தச் சமயம் 'தாய் மரணப் படுக்கையில்! எப்படியப்பா நான்?' என்றால் ஊறு கழகத்துக்கு—அதனால் இப்போது முதலே 'நான் ஒரு ஆதரவாளன்' என்கிற பக்குவத்தைப் பெறுதல் நல்லது, எதையும் தாங்கும் சூழ்நிலை எல்லோருக்கும் அமையாது!! அப்படிப்பட்டவர்வர்கள், இப்போது முதலே, நேரடி நடவடிக்கைளில் பங்கேற்காமல், ஆர்வந் தூண்டினாலும் அடக்கிக் கொள்வதும் என் கழகத்துக்காகவே என்று எண்ணும் மனப்பக்குவம் பெறுதல் வேண்டும். எவரெவர் எதுவரினும் தாங்குவேன் என்கிற நிலைமையில் உள்ளனரோ அவரெல்லாம் வருக முன்வரிசைக்கு! வருக முன் வரிசைக்கு!! கஷ்ட நஷ்டங்கள், இன்ப துன்பங்கள், ஏதாயினும் சரி என்று சொல்லவேண்டிய சோதனைக்காலம் வருகிறது, நமக்கு—அதனை ஏற்க எல்லோரும் சிறைக்குப் போயிடினும் கழகத்தைக் காக்க பலதரப்பட்ட அணிவகுப்புகள் வேண்டும், நமக்கு, அப்படிப்பட்ட அணிவகுப்பில் நம்மிடம் எது என்பதை நல்லோரே, நாட்டோரே, இன்றுமுதல் தீர்மானிக்க ஆரம்பியிங்கள்!!

ரூபாய் கணக்கைச் சொல்வதா வளர்ச்சி!

கணக்குண்டா! விபரம் உண்டா!

அமைச்சர்களே அறியார்

இதைச் செய்யப் போகிறோம் என்று சொல்லி, அதை அடைந்து காட்டுவதே "திட்டம் போட்டு" செயலாற்றுவதாகும்.

அப்படித் திட்டம் போட்டுச் செயலாற்றிய பின் போட்டத் திட்டப்படியெல்லாம் நடந்ததா என்று புள்ளி விபரம் எடுத்துப் பார்க்க வேண்டும்.

அப்போதுதான், எங்கே ஓட்டை, எது சரியாகவில்லை என்கிற விபரம் புரியும். திருத்திக்கொள்ளவும் முடியும்.

"ஆண்டுகள் பத்தாகியும், திட்டக் கமிஷனும், இந்திய அரசும், வெற்றி தோல்வி பற்றி தெரிந்துகொள்வதற்கு ஏதாவது ஒரு வழி செய்துள்ளதா என்றால் இல்லை, மக்கள்-ஏன்? பார்லிமெண்டு உறுப்பினர்கள்கூட என்ன நடந்தது, எங்கே நடந்தது என்று தெரிந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கிறார்கள்"

என்ன செலவழித்தோம் என்பதைத் திட்டத்தின் வெற்றியாகச் சொல்லப்படுகிறதே தவிர, அதனால் என்ன கிடைத்தது என்பது தெரிய முடியவில்லை.

தனியார் துறையில் இத்தனைக் கார் தயாராயிற்று, சைகிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன, சர்க்கரை உற்பத்தி பெருகிற்று, சிமெண்டு அதிகம் உற்பத்தி செய்யப்பட்டது, என்று சொல்லப்படுகிறதே தவிர, இப்படி இந்தியாவிலேயே தயார் செய்யப்பட்ட இந்தப் பொருள்களின் விலை, உலக மார்க்கெட் விலைக்குக் குறைந்து கிடைக்கிறதா இல்லையா என்று, அரசாங்கம் கவனிப்பதில்லை.

இத்திட்டங்களை முழுதும் நிறைவேற்றி முடிக்க 5 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரை ஆகும் என்று சொல்லப்பட்டது.

1. பத்ரா அணைத்திட்டம் 11—கோடியில் போடப்பட்டது.	1. இப்போது 37 கோடியில் வந்து நிற்கிறது!
2. தாமோதர் பள்ளத்தாக்கு அணை 74 கோடியில் போடப்பட்டது.	2. இப்போது 169 கோடியில் வந்து நிற்கிறது.
3- ஹீராகுட், 48 கோடியில்...	3. 153 கோடியில் வந்து நிற்கிறது.
4. பக்ராநங்கல் 153 கோடியில்	4. 172 கோடியில் வந்து நிற்கிறது...
5. ரீகண்ட் 16 கோடியில்...	5. 46 கோடி ஆகியிருக்கிறது.

இப்படிச் செலவு உயர்ந்தது மட்டுமல்ல விந்தை! போட்ட திட்டப்படி வேலை நடந்ததா என்றால் அதுவும் இல்லை!! உதாரணத்துக்கு துங்கபத்திரா திட்டப்படி 6 லட்சம் ஏக்கருக்கு மேல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்று எண்ணப்பட்டது. முற்றிலும் முடிந்தால் 12 லட்சம் ஏக்கருக்கு மேல் தண்ணீர் வசதி கிடைக்கும் என்பது கணக்கு.

ரூபாய் 74 கோடியில் 9 கோடி தவிர்த்து மீதி எல்லாத் தொகையும் இப்போது செலவாகியிருக்கிற நிலையில், இந்தக் கணக்குக்கூட, சங்கடமானதுதான்! சரி, என்று ஏற்றுக்கொண்டு அப்படிச் சொன்னபடியாவது கிடைத்திருக்கிறதா என்று பார்த்தால் 1959—60 ல் கிடைத்தது 1. 29 ஏகர் நீர்ப்பாசன வசதிதான்! 1960—61—ல் 2. 93 ஏகருக்கு மட்டும்தான்!!

ஐந்தாண்டுத்திட்டம்:

சந்தானம் 'சர்டிபிகேட்' !

"சமுதாய நல சம்பந்தமாகச் செலவழிக்கப்பட்ட தொகையைச் சொல்லிப் பிரமிக்கவைக்கும் பொழுது போக்கில் திட்டப் பிரசாரர்கள் ஈடுபடுகிறார்கள். சர்க்கார் துறையில் எவ்வளவு போட்டோம் என்று சொல்கிறார்கள். தனியார் துறை எவ்வளவு உற்பத்தி செய்தது தெரியுமா என்று கேட்கிறார்கள். இதைச் சொல்லி, நம்முடைய திட்டம் வெற்றி !—என்கிறார்கள்"

* * *

"ஓட்டைக்காருக்"கு உதாரணம் சொல்லி நம்முடைய ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி எழுதிய முன்னாள் டில்லி அமைச்சர் கே. சந்தானம் அவர்கள், திட்டங்களின்படி மேற்கொள்ளப்பட்ட 40 இனங்களை எடுத்து வைத்துக் கொண்டு, அவைகள் எப்படி நடந்திருக்கின்றன, என்பதை ஆராய்ந்திருக்கிறார்.

40 க்கும் மூலதனம் 2100 கோடி

முதல் 5 ஆண்டில் 373 கோடி
2- வது 5 ஆண்டில் 1317 கோடி
மீதி 3- வது 5 ஆண்டுக்கு

இதில் 7 இனம்—பலதரப்பட்ட பயன் தரும் திட்டங்களாகும். இதன் செலவு 663 கோடி.
இதில் நான்கு, நீர்ப்பாசனத் திட்டங்களாகும். இதன் செலவு 125 கோடி.

ஆறு எஃகு திட்டங்களுக்கு 693 கோடி.இயந்திரம் கட்டும் இரண்டு திட்டத்துக்கு 75 கோடி. நிலக்கரி திட்டம் 3 க்கு 157 கோடி. நாலு உரப்பொருள் திட்டம் 70 கோடியில்.போக்கு வரத்துக்கு 6 திட்டம் 113 கோடியில்.

பெரிய வெற்றி!—என்று வர்ணிக்கப்படும் எஃகு உற்பத்தியை எடுத்துக்கொண்டால் இன்னும் வேதனையாகும். சர்க்காருடைய பொறுப்பில் இயங்கும் மூன்று எஃகு ஆலைகளில், ஒவ்வொன்றிலும் பத்து லட்சம் டன் கிடைக்குமென்று கடந்த ஆண்டு சொல்லப்பட்டது ஆனால் 1959—60 ல் ரூர்கேலாவில் மட்டும் கிடைத்தது பத்து லட்சமல்ல, ஒரு லட்சம்கூட அல்ல, 62000 டன்தான்!! பிலாயில் ஒன்றரை லட்சம் டன்! துர்க்காபூரில் வெறும் எண்ணூறே 800 டன்தான்!! இதைவிட ஆச்சரியம் வரும் ஆண்டில் என்ன உற்பத்தியாகும் என்கிற விபரமே அதிகாரிகளுக்கு மட்டுப்படவில்லை!!!

* * *

சிந்திரி ரசாயன எரு ஆலையில், செலவழிக்கப்பட வேண்டிய தொகையெல்லாம், செலவழிந்தாயிற்று. உற்பத்தி 1960—61-ல் 24,500 டன் கிடைக்கு மென்று சொல்லப்பட்டது! கிடைத்தது என்ன தெரியுமா? 12500 டன்தான்!!

* * *

1446 மைல்களுக்கு இரயில் பாதையை மின்சாரமாக்கப்போவதாகத் திட்டம் போடப்பட்டது! ஆனால், நிறைவேற்றப்பட்டது வெறும் 88 மைலுக்கு மட்டும்தான்!!

* * *

இப்படிப்பட்ட பொது வேலைகளுக்குப் பொறுப்பான வர்களான மத்திய மந்திரிகளுக்காவது இப்படியெல்லாம் நடப்பது தெரியுமா என்றால் அவர்களும் இருட்டிலே தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்!!

வாழ முடியாதா!!

மாநாட்டில் அமைந்திருந்த கலைக் கண்காட்சி நீங்கள் ஒவ்வொருவரும் காணவேண்டிய காட்சியாகும். கலை வாழ்விற்கு அவசியமானது. அரசியல் வாழ்வை எட்டிப் பிடிக்க கலை வாழ்வு இன்றியமையாதது. அரசியல் உணர்ச்சியை மக்களுக்கு ஊட்ட கலையின் மூலம் வெகு விரைவில் நாட்டின் மக்களை அரசியல் வாழ்விற்கு கொண்டுவர முடியும். நாம் ஆட்சியின் போக்கைப் படம் பிடித்து கலைக் கண்காட்சியை வைத்திருந்தோம். காங்கிரஸ் காரர்கள் கௌகத்தியில்மிருகக் காட்சியை வைத்தார்கள்!!

நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வின் பண்பை எட்டிப்பிடிக்க அவர்கள் வாழ்வைப் படம் பிடித்து அவர்களது வாழ்க்கைப் பொருள்களை—போர்க் கருவிகளை நமது கண்காட்சியில் வைத்திருந்தோம். கலைக் கண்காட்சியின் மூலம் நமது வாழ்வை ஆட்சியை எட்டிப்பிடிக்க முயற்சிக்கிறோம்.

இதை நீங்கள் கருத்தில் கொண்டு சிந்தனை செய்து பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் இந்த ஆட்சியின் போக்கை உணரமுடியும்.

திராவிட முன்னேற்றக் கழகம் வடக்கு வாழ்கிறது—தெற்குத் தேய்கிறது, என்று சொல்கிறது என்று காமராஜர் முதல் எல்லோரும் பேசுகிறார்கள். இன்று இப்படிப் பேசியவர்களே அன்று அவர்களது திருவாயால் வடக்கு வஞ்சிக்கிறது. தெற்கு தேய்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல அரசியல் நிபுணர்கள்—பெரியவர்கள் ஆளும் அமைச்சர்கள் பலமுறை அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் வேலையில்லாத காரணத்தாலோ.- விளையாட்டாகவோ திராவிட நாட்டுக் கொள்கையைப் பற்றிச் சொல்லவில்லை. அக்கொள்கை வரலாற்றுத் தொன்மை வாய்ந்தது. யாரும் மறுக்க முடியாத கொள்கையாகும்.

அந்தக் கொள்கை இன்று அகில உலகமெங்கும் பரவும் நிலையிலிருக்கிறது. நாமும் — நமது நாட்டில் நல்ல வலிவு பெற்று வருகிறோம்.

சட்ட மன்றத்தில் நமது இதயகீதமான திராவிட நாட்டுக் கொள்கையை சமயம் வாய்க்கும் போதெல்லாம்— சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகிறோம்.

எந்த அமைச்சரும் இது வரை திராவிட நாடு இல்லை என்று ஆதார பூர்வமாக காட்ட முடியவில்லை. காட்டவும் முடியாது!

மாறாக கேலி பேசி இப்பிரச்சனையை தட்டிக் கழிக்கிறார்கள்.

நமது முதலமைச்சர் காமராசர் தமிழ் நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் நான்கு மாநிலங்களும் ஒன்று பட்டிருக்கும் போது ஏன் இந்தியா ஒன்றாக இருக்கமுடியாது, என்று நாடெங்கும் பேசி வருகிறார்.

தமிழ், கர்நாடகம், மலையாளம் மொழியில் தமிழ் மொழியின் கூறுபாடே தவிர வேறு இல்லை.

தோழியர் சத்தியவாணி முத்து எம். எல். ஏ.

நான்கு மாநிலத்தார் உடை, உணவு, பழக்க வழக்கங்கள், கலாச்சாரம்—பண்பாடு இவை ஒன்றுபட்டதுதான்.

நான்கு மாநிலத்தாரை நிற்க வைத்து எதிரிலே மராட்டியையோ, குஜராத்தியையோ கொண்டுவந்து நிறுத்தினால் தெரியும். முதலமைச்சர் இது தெரிந்தும் பாசாங்கு செய்கிறார். உண்மையில் தூங்குபவர்களை தட்டியெழுப்பலாம்—தூங்குபவர்கள் போல் பாசாங்கு செய்பவர்களை எழுப்பமுடியாது. அதைப் போல் காமராசர் தூங்குபவர் போல் பாசாங்கு செய்கிறார்.

சட்ட மன்றத்தில் நாம் பெருவாரியான வாக்கைப் பெற்று வந்திருக்கிறோம். இருப்பினும் அவர்கள் அதிகப்படியாக இருக்கிற காரணத்தால் நம்மை மதிக்காது நடந்து வருகிறார்கள்.

நாம் நான்கு மாநிலங்களும் மொழிவழி பிரிந்து தனித்தனி அமைச்சரவை வைத்துக் கொண்டு இனவழி ஒன்றுபட்டு திராவிடக் கூட்டாட்சி நடத்த விரும்புகிறோம்.

இதையே ஆந்திர நாட்டு சஞ்சீவியார்—இன்று அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர்! தென்னாட்டிற்கு ஒரு உணவு மண்டலம் பிரித்து உணவுக் குழு ஏற்படுத்தினால் தென்னகத்தில் உணவுப் பிரச்சனை இருக்காது என்று கூறியுள்ளார்.

நமது மின்சார அமைச்சர் ராமையா அவர்கள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தமிழகம் இவைகளுக்கு தனி மின்சாரத் திட்டம் அமைத்தால் மின்சாரக் கட்டுப்பாடு நீங்கும் என்று கூறியுள்ளார்.

நமது போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் நான்கு மாநிலங்கட்கும் போலீஸ் இலாகாவையும் இராணுவத்தையும் ஒன்று படுத்துவது நல்லது என்று கூற்யுள்ளார்.

வாதத்திற்காகத்தான் அமைச்சர்கள் திராவிடம் பிரிந்தால் வாழாது என்று சொல்கிறார்கள்.

"மின்சாரமும்—போலீசும்—உணவும்—குடிதண்ணீரும் நான்குமாநிலங்கட்கும் ஒன்றாக இருக்கும்போது— ராணுவமும் தபால் தந்தி இலாகாவும், ரயில்வேயும் ஏன் ஒன்றாக இருக்கக் கூடாது என்றுதான் கேட்கிறோம்!"

பாராளும் பண்டித நேரு மக்களாட்சியால் வந்தவர் என்றாலும், ஆட்சி பீடத்தை ஏற்குமுன் சம்பிரதாயச் சடங்கு முறைகளை பின்பற்றி இரவு 12—மணிக்கு மதச் சடங்கு பெற்றுதான் பிரதமர் பதவியை ஏற்றுள்ளார்.

பண்டித நேரு திராவிட நாட்டுப் பிரிவினையை ஏற்று---திராவிடத்தைப் பிரித்துக் கொடுப்பது தான் அவரது அரசியல் நாகரிகமும் பெருந்தன்மையுமாகும்.

அப்படி அவர் செய்ய வில்லையானால் டாக்டர் அம்பேத்கார் சொன்னபடி உள்நாட்டுப்போர் ஏற்படும். அமெரிக்காவில் ஏற்பட்டதுபோல்' இங்கிலாந்தில் ஏற்பட்டது போல் இந்தியாவிலும் உள்நாட்டுப்போர் ஏற்படும் என 1945-ல் டாக்டர் அம்பேத்கார் கூறியுள்ளார்.

உள்நாட்டுப்போர் ஏற்பட்டால் நாட்டை அடைந்தே தீரலாம். அறிஞர் அண்ணா அவர்கள் அகிம்சை முறையில் நாட்டை விடுவிக்க விரும்புகிறார். வேட்டு முறையை அவர் விரும்பவில்லை. ஓட்டு முறையைத்தான் விரும்புகிறார்.

ஆகவே தோழர்களே திராவிட நாட்டுப் பிரிவினை நமது பிறப்புரிமை. நாம் அதைப் பெற்றால் தான் வடநாட்டுச் சுரண்டல் ஒழியும். தென்னாடு வாழமுடியும் அதற்கு அறிஞர் அண்ணாவின் விருப்பப்படி 1962-ல் கணிசமான முறையில் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு நமது தோழர்கள் வெற்றி பெற வேண்டும்.

விரைவில்

*

அரங்கண்ணல் தீட்டும்

புதிய தொடர் கதை

விபரம்: அடுத்த இதழில்

வளரும் சிந்தனை!

உங்களையெல்லாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனித இனம் தோன்றிய காலத்துக்கு அழைத்துச் செல்ல விழைகிறேன். உயிரினங்கள் பரிணும வளர்ச்சிதான், ஆதிமனிதன் என்ற “டார்வின்” தத்துவத்தை ஒப்புக்கொண்டு அதன்படி ஆராய்வோமானுல் அந்த முதல் மனிதனுக்கும் இன்று செவ்வாய் மண்டலத்தை எட்டிப்பிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் மனிதர் கூட்டத்துக்குமிடையே இருந்த நீண்ட இடைவெளியில் மறுமலர்ச்சிக் கருத்துக்களை மனித சமுதாயத்திற்கு வழங்கியோர் ஏராளம், ஏராளம்!

தரையில் ஊர்ந்தோ அல்லது நடந்தோ ஆடைகளின்றி வாழ்ந்த அந்த முதல் மனிதனை—அல்லது மனிதக் கூட்டத்தை இயற்கையின் கொடுமைகள் மிக அதிகமாகத் தாக்கியிருக்கக்கூடும்! கடும் குளிரிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அவன் மரத்தின் இலைகளையோ அல்லது மிருகங்களின் தோல்களையோ ஆடையாக அணிந்து கொண்டான்! இப்படி முதலில் ஆடை அணியக் கற்றுக் கொண்டானே அவன் உலகில் தோன்றிய முதல் சிந்தனையாளன்! எங்கேயோ மரப் பொந்துகளிலும் மலைச்சந்துகளிலும் வாழ்ந்து இயற்கையின் நியதிகளான மழை வெயில் போன்றவைகளால் தொல்லைபட்ட மனித சமுதாயத்திலே ஒருவன் குடிசை அமைத்து அதன் மூலம் அந்தக் கொடுமைகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு மற்றவர்களுக்கும் வழி காட்டினனே அவன் ஒரு சிந்தனையாளன்!

கொடியவன் விலங்குகளின் கோரத் தாக்குதல்களுக்கு இரையாகி அழிந்துகொண்டு வந்த மனித சமுதாயத்திற்கு ஈட்டி, வேல் போன்ற ஆயுதங்களைப் படைத்தளித்து அதன் மூலம் அந்த பெரும் ஆபத்துக்களிலிருந்து மனித இனம் தப்பிப் பிழைக்க வழி வகுத்தானே அவன் நமது போற்றுதலுக்குரிய நல்ல சிந்தனையாளன்! இரண்டு கற்துண்டுகளை ஒன்ருக உரசினுல் அதிலிருந்து வருகின்ற பொறியிலிருந்து நெருப்பை உண்டாக்கி அந்த ஒளியின் மூலம் தனக்கு அச்சத்தை தந்து கொண்டிருந்த இருளை அகற்றினனே அவன் சிறந்த சிந்தனையாளன்! பச்சை இறச்சியை தின்றுகொண்டிருந்தவர்களைப் பார்த்து அதனை நெருப்பிலே சுட்டுத் தின்ருல் சுவையாக இருக்கும் என்று சொல்லி சுட்டுத் தின்னக் கற்றுக் கொடுத்தவன் சிந்தனையாளன் வரிசையிலே இடம் பெறுகிருன்!

அடர்ந்து வளர்ந்த தாடியை சிரைத்துக்கொண்டால் அழகாக இருக்கும் என்று சொன்னவன்—நீண்டு வளர்ந்த நகத்தை வெட்டிக்கொண்டால் வசதியாக இருக்கும் என்று சொன்னவன் இப்படி எத்தனை எத்தனையோ! சொன்னுல் எண்ணிலடங்கா!

இந்த இருபதாம் நூற்றுண்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் இந்த சிந்தனையாளர்களுக்கெல்லாம் நன்றி செலுத்தகடமை பட்டிருக்கிருேம்!

மனித சமுதாயத்தில் இப்படிப் படிப்படியாக வளர்ந்த சிந்தனை இன்று ‘விண்வெளி’ ஆராய்ச்சிகள் வரையிலே வெற்றிகரமாக நடந்துள்ளன!

மனித இனத்தின் சிந்தனை காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்த மாறுபட்டும், வேறுபட்டும் நிற்பதைக் காணலாம். நம்முடைய



பெங்களூர், கி. சோழன்

திராவிட சமுதாயத்தைபொறுத்த வரையில் அற்றைய நாளில் சிந்தனையின் பிறப்பிடமாக அது இருந்தது! உலகத்தில் மற்ற இனத்தவருக்கும் நமக்கும் ஒரு பெருத்த வேறுபாடு இருந்தது!

நமது பழம் பெருமைகள் வியக்கும் தரத்தவை! நமது முன்னேர்கள் வரலாறு வானளாவ உயர்ந்திருந்தது. அவர்கள் உலகெல்லாம் தங்களுடைய அன்பு நெறியைப் பரப்பி பெருமை கொண்டனர். வீரத்தாலே அவர்கள் வென்ற நாடுகளும் பலப் பல! அந்த வீடு வரலாற்றினைப் படிக்கின்றபோது நமது உள்ளமெல்லாம் பேருவகை கொள்கிறது! நமது நாகரீகம் உலகிலேயே தலைசிறந்த நாகரீகமாக விளங்கியது. உலகின் மற்ற பகுதிகளில் அறியாமை இருள் மண்டிக் கிடந்த காலத்தில் நமது நாடு ஒளிமயமாகத் திகழ்ந்தது. நமது நாகரீகப் பேரொளி உலகின் பல பகுதிகளுக்கும் பரவியது. மேலைய நாட்டார் பலர் கடலைக் கண்டு அஞ்சிய காலத்தில்நாம் கடலிலே கலம் செலுத்தியிருக்கிருேம். ரோமுக்கும், கிரேக்கத்திற்கும் நமது வணிகர்கள் சென்று வர்த்தகம் நடத்தி பொருளீட்டிவந்து நமது நாட்டின் செல்வச் செழிப்பை வளர்த்திருக்கிருர்கள். இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நிலை! காவிரியின் கரை உடைப்பைக் கட்டுப்படுத்துவதற்காக அன்று ஆண்டு கொண்டிருந்த கரிகாற் பெருவளத்தான் என்ற சோழப் பெருமன்னன் ஈழத்திற்குப் படை நடத்திச் சென்று பல்லாயிரக் கணக்கான கைதிகளை இழுத்து வந்து காவிரியின் இருமருங்கிலும் கரை அமைத்தான்—கல்லணை கட்டினுன் அவை இன்றும் நிலைத்து நின்று அந்த முன்னேனின் புகழ் பாடிக் கொண்டிருக்கிறது.

இது அன்றைய நிலை! ஆனுல் இன்றைய நிலை என்ன? எந்த இலங்கைக்குப் படையெடுத்துச் சென்ருனே கரிகாலன் அவனுடைய வழிவந்தவர்கள் அதே இலங்கைக்குச் செல்லுகிருர்கள் கள்ளத்தோணியிலே! எங்கேயாவது வேலை கிடைத்தால் போதும் அரைவயிறு கஞ்சிக் கிடைத்தால் போதும். தாயகத்திலே வாடிக் கொண்டிருக்கும் தனது குடும்பத்தை உற்ருர் உறவினரை எப்படியாவது காப்பாற்றினுல் போதும் என்கின்ற எண்ணத்தோடு! ஏன் இந்த நிலை? எப்படி வந்தது இந்த தாழ்வு? காரணம் நமது சிந்தனை தடைபட்டுவிட்ட காரணத்தால்!

நம்மை நானூறு சாதிகளாகப் பிரிக்கப்பட்டுவிட்ட காரணத்தால்! நாலாயிரம் பிரிவுகளாக நாம் ஆகிவிட்ட காரணத்தால்! மனித முயற்சியில் நம்பிக்கை இழந்துவிட்ட காரணத்தால்! மற்ற நாடுகளின் வரலாறுகள்காட்டுமிராண்டிக் காலத்தில் துவங்கி, புது வாழ்வு பெற்றதாகத்தான் உள்ளது, ஆனுல் நமது வரலாறு பொற்காலத்திலிருந்து துவக்கி மிக வேகமாகக் கற்காலத்திற்குச் சென்று கொண்டிருக்கிருேம். இந்தநிலை மாற வேண்டுமானுல் நமது சிந்தனை வளர்ந்தாக வேண்டும்.

—0—

போர்முரசு
ஆசிரியர்
டாக்டர் முத்துச்செல்வம்
15—8—61 இதழில்
க. சிங்கமுத்து எழுதும் அற்புதமான கற்பனைத் தொடர் கதை ஆரம்பமாகிறது! இத்துடன் தசாவதாரம்—2, ம. பொ. சிவஞானம. ‘ரிஸ்ட் வாட்ச்’ தான் ‘ரிப்பன் கார்டு’ இன்னும் பல சுவையான பகுதிகள் உண்டு!
“போர்முரசு”
புதுக்கோட்டை.

வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி



தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

வாணி தமிழ், இந்தி சுபோதினி
தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ, 2-25 வி.பி.பி.செலவு 75 ந.பை.

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)
சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னே. பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது: விலை ரூ, 3. வி. பி. பி. செலவு ரூ 1.

குடும்ப இலகு வைத்தியம்
வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலைய பெருமாள் தெரு,
(தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

2-ப்பக்கத் தொடர்ச்சி

அவரை, ‘தலைவராக’ மதிக்க மறுத்தான்! ‘ஏம்பா! இந்தா! உனக்கு ஏதாவது சில்லரை வேலைகள் போட்டுத் தருகிறேன். பேசாமலிரு...’’ என்று ஆசை காட்டினான்!! கென்யாட்டா, சிரித்தார். தேசீயப் பணியிலீடுபட்டார்.

* * *

பத்தாண்டுகளுக்கு முன்பு தொடங்கி சில ஆண்டுகள் நடைபெற்ற “மாவ், மாவ்’’ இயக்கம் மிகவும் பயங்கரமான தொன்று என்றாலும் அந்த இயக்கத்தின் விளைவாக இன்று அந்த நாடு சுதந்திரத்தை நோக்கி அடியெடுத்துவைக்க தொடங்கியுள்ளது. 1957ம் ஆண்டு, கென்யா நாட்டின் அரசாங்கம் சில அரசியல் சீர்திருத்தங்களைக் கொணர்ந்து நிறைவேற்றியது. அதன்படி அந்த நாட்டின் குடி மக்களான ஆப்பிரிக்கர்களுக்கு வோட்டுரிமை கிடைத்தது. அதே ஆண்டில் ஒரு பொதுத்தேர்தலும் நடைபெற்றது.

இப்படி நடைபெற்ற பொதுத் தேர்தலில், கென்யா ஆப்பிரிக்க தேசீயக் கழகம் போட்டியிட்டது. அதை நடத்திச் செல்பவன் வயதில் மிகவும் இளைஞன். 27வயது நிரம்பிய டாம்போயோ என்ற அந்த இளைஞனும் தேர்ந்தெடுக்கப்பட்டான். இவன் ஜோமோ கென்யாட்டாவின் சீடர். இந்த இளைஞன் உலகமெல்லாம் சுற்றியவன். இந்தியாவில்பவநகரில்நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு மாநாட்டிற்கும் வந்திருந்தான்.

இந்த வீரமிக்க இளைஞன் கரத்தில்தான் கென்யா நாட்டின் தொழிலாளர், அணிவகுப்பும் உள்ளது, இவன்தான் இந்த நாட்டின் எதிர்காலத்தை தன் கரத்திலே வைத்துக் கொண்டிருக்கிறான்.

1957ம் ஆண்டுத் தேர்தலுக்குப்பின், மீண்டும் இந்த ஆண்டு ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் டாம்போயோவை பொதுச் செயலாளராகக் கொண்ட கென்யா ஆப்பிரிக்க தேசீயக் கழகத்தினர்தான் பெருவெற்றி பெற்றுள்ளனர். இந்த தலைவனின் ஒத்துழைப்பின்றி எந்த ஒரு நிரந்தர அரசியல் அமைப்பையும் அந்த நாட்டில் ஏற்படுத்த முடியாது.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்றில் நடைபெற்ற தேர்தலில்டாம்பொயோ,ஓடிங்கா போன்ற பல கட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் அரசியலில் பல்வேறு கருத்துக் கொண்டவர்கள் என்றாலும் அவர்கள் அனைவரும் ஜோமோகென்யாட்டாவின் விடுதலையை முன் வைத்தே தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

* * *

கென்யா நாட்டின் அரசியல் நிலையை பற்றி அறிய அங்கு சென்று அந்த நாட்டைச் சுற்றிப் பார்த்து ஜார்ஜ் டெல்ப என்ற கேம்பிரிட்ஜ் மாணவன் ஒருவன் கென்யாட்டாவைப் புகழ்ந்து ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அவரது புத்தகத்தில் பல உண்மைகள் நமக்குத் தெரிய வருகின்றது.

“கென்யாட்டாவின் கரங்களில் சிறைக் கைதியாக கென்யா நாடு இன்று கட்டுண்டு கிடக்கிறது’’ என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

“மாவ் மாவ்’’ இயக்கத்திற்கும் கென்யாட்டாவிற்கும் தொடர்பு கிடையாது. அந்த இயக்கம் தொடங்குவதற்குக் காரணம் அந்த நாட்டில் நெடுங்காலமாக ஆட்சி புரிந்து வந்த பலவீனமான அரசாங்கம்தான் காரணம் என்று ஜார்ஜ்டெல்ப் குறிப்பிட்டுள்ளார். பத்தாண்டுகளுக்கு முன் “சாவுக்கும், இருளுக்கும் தலைவன்’’ என்று கென்யா நாட்டு கவர்னரால் குறிப்பிடப்பட்ட கென்யாட்டா, இன்று “ஒளிக்கும் வாழ்வுக்கும் தலைவனாக’’ மாற்றப் போவதை உலகம் கண்டு களிக்கப் போகின்றது கென்யா நாட்டின் அரசியல் சூழ்நிலைகள்தான் கென்யாட்டாவை அந்தப் பாதையில் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்று இன்று அனைவரும் நம்புகின்றனர்.

ஆங்கில நாட்டின் சசெக்ஸ் பகுதியில் ஸ்டாரிங்டன் கிராமத்தில் எட்னாதிரேள் கிளார்க் என்ற பெண்ணை ரகசியமாக மணந்து கொண்ட கென்யாட்டா, வெள்ளையரைக் கொல்லும் “மாவ், மாவ்’’ இயக்கத்தை தொடங்கியிருக்க மாட்டார் என்றும் இப்போதும் பலர்வாதிக்கின்றார்கள்.

இந்தத் திருப்பம் கென்யாட்டாவை மீண்டும் அரசியலுக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றது. சிறையிலேயே அவர் வாழ்வு சிதைந்துவிடும், கருகிவிடும் என்று நம்பியவர்கள் இன்று ஏமாற்றப்படப் போகின்றனர். விடுதலைப் போர் நடத்தியவர்கள் இதுவரை தோற்றதாக வரலாறே இல்லை. வேண்டுமானால் விடுதலைப் போரைத் துவங்கியவர்களின் காலத்திலேயே அது சிலருக்குக் கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றுள்ள இந்தக் காலத்தில் உருவான விடுதலைப் போர்கள் எதுவும் வீழ்ந்துவிடவில்லை. கென்யா நாட்டின் அரசியலில் புதிய திருப்பம் உருவாகிக் கொண்டிருக்கிறது. கென்யாட்டா அரசியலுக்கு வந்தால் மிகவும் பயங்கரமாக இருக்கும் என்றுகூட பலர் இன்னமும் பயப்படுகின்றார்கள்.

திராவிடத்தின் விடுதலைப்போர் வெற்றியடையுமா என்பவர்களின் திருப்பார்வைக்கு கென்யாவின் அரசியல் மாறுதலை வைக்கின்றோம்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

அய்யா அவர்களுடன் போகும் சந்தர்ப்பம் கிடைத்தது, நான் அப்போது பள்ளியிறுதி வகுப்பு பரீட்சை எழுதியிருந்தேன். அப்போதெல்லாம் விடுமுறைகளில் மாணவர் சுற்றுப் பயணம் நடக்கும். மாணவர்சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்வதற்குப் பதில், ‘குடியரசு’அலுவலகத்தில்என்னை இருக்கும்படி அப்போது அய்யாவிடமிருந்த தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் வற்புறுத்தினார்கள். அதனால் மிகவும் மகிழ்ச்சியோடு சென்றேன்!

விடுமுறை முடிந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேருகிறவரை அங்கேயே பணியாற்றினேன்!! ‘அய்யா’ என்கிற பெயர், தெய்வம் என்பார்களே, அதுபோல எனக்கு. அந்தப் ‘பக்தி’க்கு முதல் அதிர்ச்சி வந்தது, ஒரு கடிதத்தால்!! அப்போது அண்ணா, டி. என். இராமன், சலகண்டபுரம் கண்ணன், நாமக்கல் தோழர் ஒருவர் ஆகியோரின் பெருமுயற்சியால் ‘பாரதிதாசன் நிதி’ திரட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை அய்யா மனமார விரும்பவில்லை. இதனால் அண்ணாவின் மாட்டும் அந்த நிதியைச் சேகரிப்போர் மீதும் ஒருவித அதிருப்தியை வளர்த்து வத்தார். இப்படியெல்லாம் ஒருவிதச் சூழ்நிலையிருப்பதைச் சிங்கப்பூர் ‘தமிழ் முரசு’ தினசரியின் ஆகியோரும், சுயமரியாதை இயக்கப் பற்றுக் கொண்டவரும் திருவாரூர்க்காரருமான கோ. சாங்கபாணி அவர்கள் இங்கே ஊருக்கு வந்தபோது கண்டு, தன்னுடைய நண்பர் ஒருவரிடம் சிங்கப்பூரில் சொல்லியிருக்கிறார்.

(இப்போது கோ.சாரங்கபாணி அவர்கள் சிங்கப்பூரில், மிகவும் செல்வாக்கு வாய்ந்த ஆங்கில தினசரி ஏட்டையும், தமிழ்த் தினசரியையும், நடத்திக்கொண்டு, பெருமைப்படத் தக்க அளவில் இருக்கிறார்கள்)

அவர் சொன்னதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த அந்த நண்பர் அய்யாவுக்குச் சில யோசனைகளைச் சொல்லி கடிதம் எழுதியிருந்தார். கழகத்தின் வளர்ச்சியை முன்னிட்டு அப்படிப்பட்ட கவிஞர்களுக்கெல்லாம் உதவியும் ஒத்தாசையும் செய்வது நல்லது என்பதே அந்த யோசனைகள். அய்யாவுக்கு வரும் கடிதங்களை முறைப்படுத்தி காலையில் கொண்டு கொடுத்து—அவர் எப்படியெப்படி பதில் எழுதச்சொல்கிறாரோ, அதுபோல எழுத வேண்டியது என் பல வேலைகளில் ஒன்று! அக்கடிதத்தைக் காட்டி என்ன பதில் எழுதலாம் என்று கேட்டதற்கு,

“இந்தப் பாரதிதாசனைப் பத்தி என்ன வந்தாலும், எந்தச் சேதி வர்தாலும், பத்திரிகையில் போடாதே. பதிலும் எழுதாதே,’’ என்று கோபமாகச் சொன்னார் பெரியார்.

நான் திகைத்துப் போனேன்! ஆசாபாசங்கள் அண்டாதவர்—இல்லாதவர்க்கு இரங்குபவர்—ஈரோட்டு வள்ளல்—உலகப்பெரியார்—என்று நான் எண்ணியவர் இப்படிச் சொல்கிறாரென்றால்!! பாரதிதாசன் அவர்களின் கவிதைகள், என் மனதைக் கவர்ந்தவை. நான் பத்தாவது படிவம் படித்துக் கொண்டிருந்தபோதுதிருவாரூரில் முத்துகிருட்டின நாட்டார் என்றொரு தமிழ்ப்புலவர் இருந்தார். தோழர் நெடுஞ்செழியனுக்கும் பட்டுக்கோட்டையில் தமிழாசிரியராயிருந்தவர். சகோதரர் கருணாநிதிக்கும், திருவாரூரில் ஆசிரியராயிருந்தவர். அவரது வகுப்பில் நான் தமிழில் முதல்வனாயிருப்பேனே ஒழிய என் உடல் முழுதும் கதர்தான்;

காந்தியடிகள் பெயரும், காங்கிரசும் சதா என் நினைவிலிருக்கும். அப்படிப்பட்ட சமயத்தில் கவியரசர் பாரதிதாசனாரின் “அழகின் சிரிப்பு’’ நூலை என்னிடம் கொடுத்துப் படிக்கச் செய்தவர், அந்தப் பெரியவர்-கழகக் கொள்கைகள் மீதும் கடவுள் பக்தனாயிருந்த என்னை பற்றுக்கொள்ளுமபடிச் செய்ததில் பாரதிதாசனாரின் கவிதைகளுக்கும் பெரும் பங்குண்டு! அப்படிப்பட்டவருக்கு இருட்டடிப்புகொடுஎன்றுகவிஞரே போற்றிப் புகழும் தலைவர் சொல்வதென்றால்? இப்படியெல்லாம் வெறுப்பு விருப்பு பாராதவர் என்று நான் எண்ணியிருக்கும் பெரியார் அவர்களே கூறுவதென்றால்?

நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்! அய்யா அவர்களின் வீட்டிலிருந்து‘குடியரசு’ ஆபீசுக்கு வரும்வரையில் எனக்கு அதே சிந்தனைதான்!! அதைவிடப் பெரிய அதிர்ச்சி, அடுத்தபடியாக எனக்குக் கிடைத்தது, இன்னும் சில நாட்களில்.

(வளரும்)

கேள்வி பதில்

கே: உயிர் ராசிகள் உலகத்தில் உண்டான விதம் எப்படியண்ணே?

—சிவகுரு

மேலச்சிந்தாமணி.

ப: உயிர் ராசிகள் உற்பத்தியான முதலிடம், டார்வின் கொள்கைப்படி, ஆழ்கடலாகும். ஒரே ஒரு 'செல்' கொண்ட அமீபா எனும் பிராணிதான் முதன் முதலில் உருவானது. பல 'செல்' கள் வளர்ந்து அமீபா பல தரப்பட்ட கடல் மீன்களாக உருப்பெற்றது. வளர்ச்சி படிப்படியாகி கடற் பிராணிகள் பல மாதிரிகளில் உருவாயின. அவைகளில் சில வளர்ந்து தரைகளை நோக்கியும் சென்றன. அவைகளுக்கு உணவைத் தேடவும், சூரிய வெப்பம் முதலியவைகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவுமான உணர்ச்சிகள், தேவையின் காரணமாக, உருவாயின அவைகளில் சிலவற்றிற்கு மரங்களின் மீது ஊர்ந்து செல்லவும், மலைகளின் மீது நகரவும் பக்குவம் வந்தது இந்த முயற்சியின் போது திரும்ப நீருக்கு சென்றவையும் உண்டு. சில, இறக்கைகள் முளைத்து, பறவைகளாகவும் ஆயின. ஆனால் ஒவ்வொரு வித மாறுதலும் உருவாக எத்தனையோ இலட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கவேண்டும் என்று விஞ்ஞானம் சொல்கிறது! அப்படி மாறுதலான பிராணிகளில் ஒன்றுதான் குரங்கு. குரங்கிலிருந்து வளர்ந்தவன் மனிதன் என்பதைத்தான் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே!!

* * *

கே: மனித உடல் என்றால்?

அதே தோழர்.

ப: பத்து காலன் தண்ணீர், ஏழு 'பார்' சோப்பு செய்வதற்குள்ள கொழுப்பு! கந்தகம்—இரும்பு முதலிய சத்துக்கள்! 2000 தீக்குச்சிகள் செய்யக் கூடிய அளவுக்கு பாஸ்பரஸ்! காற்று!—இன்னும் சில ரசாயனப் பொருள்கள்!—அடங்கியது என்கிறது உடற்கூறு நூல்,

* * *

கே: இங்கிலாந்து நாட்டின் புராதனச் செல்வம் யாது?

பா. சு. மணி,

திருவல்லிக்கேணி.

ப: 'செல்வம்' தானே!! ஆட்டு மந்தைதான் இங்கிலாந்து நாட்டின் ஆதிச் செல்வமாக எண்ணப்பட்டது. யாரிடம் எவ்வளவு ஆடிருக்கிறதோ அவர்களே, அப்போது செல்வவான் உரோமத்திலிருந்து கம்பளம் நெய்யும் முறையை முதலில் சொல்லிக் கொடுத்தவர் பிளமிங்ஸ்என்பவர்.

அடுத்த இதழ் முதல்!

"அயல் நாடுகளில் ஐம்பது நாள்"

மேயர் முனுசாமி தீட்டும்

பயணத் தொடர்

'அறப்போரில்!'

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

மென்று கூறிவிட்டார் செயலிலும் காட்டிவிட்டார். சிந்தை, அணு ஒவ்வொன்றும் தலைவனது கட்டளைக்கு அடங்குமென்று சத்தியத்தைச் செய்துவிட்டார்.

கிழவர், குமரர், பெண்டிர் என்று கிளர்ந்தெழுந்த பட்டாளத்தின் மத்தியிலே - ஒரு நாள் — தனிக்குரல் ஒன்று—வெடித்தது! நரிக் குரல் என்றனர் நல்லோர், பல்லோர்!

"ஓ! தலைவனே! தலைவன் கீழ் அணிவகுக்கும் படைகளே! நீங்கள் எல்லாம் போருக்குத் தகுதியில்லை! ஊருக்குத் திரும்புங்கள்! உங்கள் முகம் அழகாயிருக்கிறது என் முகம் விகாரமாயிருக்கிறது- அழகான முகங்கள் அணி வகுப்பில் இருத்தல் கூடாது! நீங்கள் எல்லாம் சுறுசுறுப்பாய் இருக்கிறீர்கள். ஓடியாடி வேலை செய்கிறீர்கள். உங்களைப் போன்றவர்கள் போருக்குத் தகுதியில்லை!

உங்கள் கையிலே இருப்பது போர்க் கருவிகள் அல்ல! இதோ என் கையிலிருக்கும் 'மொந்தை' தான் போர்க் கருவி! நீங்கள் பிடித்திருப்பது விடுதலைக் கொடியல்ல! இதோ என் மடியில் கிடக்கும் பூங்கொடிதான் உண்மையான புரட்சிக் கொடி! படை நடத்தும் தளபதிகளே! பாதையிலே பல ஆறுகளைத் தாண்டுவீர் நீவீர்! ஆனால் என் உள்ளத்தில் கொதிக்கும் அழுக்காற்றைத் தாண்டுவீரோ? ஆகாது உம்மால்! நீங்கள் களத்திற்கு 'லாயக்கு' இல்லை! நீங்கள் எல்லாம் கலையரசியின் செல்லப் பிள்ளைகள்!

என்னைப் பாருங்கள்!

கலையை வெறுப்பதற்காகவே, அது தெவிட்டிப் போகட்டும் என்று அதனையே சுழன்று சுழன்று சுவைத்து வருகிறேன். சர்க்கரையை அதிகமாகத் தின்றால்தானே அது தெவிட்டிப் போகும் - பிறகு அதனை வெறுக்கலாம்.

அந்தத் தத்துவத்தின்படிதான் என் கொள்கை மெல்லிய குரலில் முணகிக் கொண்டிருக்கிறது. மீண்டும் சொல்கிறேன்; நீங்கள் யாரும் போருக்குத் தகுதியில்லை. நீங்கள் தகுதியானவர்கள் என்றால், குறைந்தது இரண்டு போர் முனைகளிலாவது புறமுதுகிட்டு ஓடியிருக்க வேண்டும்—என்னைப் பாருங்கள்—ஆதாரத்துடன் காட்டுகிறேன்; என முதுகைப் பாருங்கள்! ஓடிய ஓட்டத்தில் எதிரியின் அம்பு உராசிய இடத்தைப் பாருங்கள்!

ஓகோ! வாரும் படை வீரர்களே! நீங்கள் போருக்குத் தகுதியில்லை!"

—இப்படி அபத்தக் குரல் வந்த பக்கம் சில வீரர்கள் திரும்பினர்! கை கொட்டிச் சிரித்தனர்!

தலைவன், அவர்களைப் பார்த்தான்.

"அவனை, அலட்சியம் செய்யுங்கள்! அலட்சியம் செய்யுங்கள்" என்று கூவினான்.

"தலைவனே! அவன் நம்மவனல்ல போலும்! பகைவர் நாட்டு ஒற்றன் என எண்ணுகிறோம்! பைத்தியம் போல் நடித்து படை வீரர் கவனத்தைக் கவர்ந்து பாதகம் செய்யப் பார்க்கிறான்" என்று எச்சரித்தான் ஒரு தளபதி,

"எதிரியேயாயினும் நமது பண்பு அவனை நல்வழிப் படுத்தும்! ஆகவே அவனை அலட்சியம் செய்யுங்கள்! ஆகவே அலட்சியம் செய்யுங்கள்!"

தலைவன் அழுத்தந் திருத்தமாகப் பேசினான். அவன் குரலில் கம்பீரம் மிகுந்திருந்தது.

"சிங்கத் தலைவனே! அந்தச் சித்தம் பேதலித்தவனைச் சிலர் தட்டிக் கொடுக்கின்றனர்—பாரீர்! பாரீர்!!" என்று ஒரு வீரன் கத்தினான்.

"அனைத்தையும் அலட்சியப் படுத்துங்கள்! வேகமாக நடந்து வாரீர்! வேலை நிறைய இருக்கிறது—வாருங்கள்" என்றான் தலைவன்.

"எமை அழைத்தது, தங்கம் எடுக்கவோ? தாய் நாட்டை மீட்கவோ?" என்றான் ஒருவன்.

"தங்கத் தாய் நாட்டை மீட்கத்தான்!" என்றான் தலைவன்.

நடந்தனர் பின்னே!

"தலைவனே! இதுதான் இறுதிப் போரா? இதிலே நாடு கிடைத்து விடுமா?"

"அவசரப்படாதே! நாம் சந்திக்க வேண்டிய போர் முனைகளில் இதுவும் ஒன்று! வா, வேலையைப் பார்ப்போம்!"

அப்போது ஒரு வீரன் கத்துகிறான்;

"தலைவா! அதோ பாருங்கள்--- அந்த 'வரட்டுக் கூச்சல்' இங்கேயும் ஓடிவருகிறான். அவன் நம் காரியத்தைக் கெடுத்துவிடக் கூடும்!"

"அஞ்சாதே! அவனை அலட்சியப் படுத்து!

யாரும் அவனைத் திரும்பிப் பார்க்காதீர்கள்.

அவன் ஊளையிட்டுக் கொண்டேயிருக்கட்டும்.

வாய் வலிக்கும் வரையில் பேசட்டும்.

கால் வலிக்கும் வரையில் கும்மாளம் போடட்டும்!

அவனே, அவனை மற்றவர்களுக்குப் புரிய வைத்துக்கொண்டிருக்கிறான்.

அவனை அலட்சியப் படுத்துங்கள்! அவன் ஒரு விட்டில் பூச்சி!

வேலை, காத்துக் கிடக்கிறது விரைந்து வாருங்கள்!"

தலைவன் கட்டளையிடுகிறான் வீரர்கள் பின்தொடர்கின்றனர். வீணன் வெட்கித் தலைகுனிந்து நின்றுவிடுகிறான்.

—0—

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை -6